# பரிமளத் திரட்டு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" - குறள்



தெய்வத் திருவாட்டி

**கமலேஸ்வரி கணேசலிங்கம் (Dip. in Com.)**

**அன்னையின் மடியில்**
**19.2.1951**

**சென்னையின் மடியில்**
**13.3.2005**

மண்ணில்நிகழ் தாரணமாம் மாசியிருபத் தொன்பதாம் நாள்
புண்ணியம் சேர் பூர்வபக்க சதுர்த்தியிலே - பண்பொடுநற்
கண்ணியம் மிக்கவராம் கமலேஸ்வரி அணங்கு
நண்ணினார் ஈசன் பதம் நன்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரத்துவமடைந்த யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த திருமதி. கமலேஸ்வரி கணேசலிங்கம் (Dip.in.Com.) அவர்களின் நினைவலைகள்

**க**ல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றி மூத்த குடியினராய் பரத கண்டத்துத் தென் மருங்கில் நிலவிய முடியுடை மூவேந்தரது ஆட்சியால் மாட்சிமையுற்ற - பழம் தமிழகத்தில் வாழ்ந்து வந்த சைவ வேளாண் குடிகளில் (சைவப்பிள்ளை) ஊராண்மையும், பேராண்மையும், தாளாண்மையும் ஒருங்கே அமையப் பெற்ற சிலர் ஈழமணித் திருநாட்டின் வடபால் அரசோச்சிய பண்டைத் தமிழ் மன்னரின் ஆட்சியில் அரச சேவை காரணமாக யாழ்ப்பாண குடா நாட்டின் கண் மாண்புற வாழ்ந்து வருவாராயினர்.

அவ்வாறு வாழ்ந்து வரும் சைவ வேளாண்குடிகள் (சைவப் பிள்ளை) பலவற்றுள் சீரும், சிறப்பும், உயர்வும் மிகத் திகழ்ந்தவர் யாழ்நகர் அம்பலவாணர் என்பவர். இவர் தம் வழித்தோன்றலாகிய அரசரத்தினம் என்பவர் தபாலதிபராக (Post Master) பணிபுரிந்தார்.

அக்காலத்தில் தமிழ் நகராம் யாழ்நகரில் பேரும் புகழுமாக வாழ்ந்த கதிரவேலு சின்னத்தம்பி என்பவரின் வழி வந்தவர் பாக்கியம் ஆவார்.

தபாலதிபர் அரசரத்தினம், பாக்கியத்தை வாழ்க்கைத் துணையாகப் பெறும் பாக்கியம் பெற்றார்.

அரசரத்தினம் - பாக்கியம் தம்பதியினர் பெற்றெடுத்த புத்திரச் செல்வங்கள் காயத்திரி, சிவநேசன், காளிதாசன் அருந்தவநாதன் ஆகிய நால்வரையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கொடுத்த இறைவன் சின்னஞ்சிறு வயதிலேயே மறுகையால் மீண்டும் பெற்றுக் கொண்டான். அரசரத்தினம் தம்பதியினர் மனம் வருந்தினர், இறைவனை வேண்டினர். மாயவன் வண்ணை வெங்கடேசன் மீண்டும் இரங்கினான். நான்கு புத்திரச் செல்வங்களை மீண்டும் கொடுத்தான். அவர்கள் **கமலேஸ்வரி**, கமலேசன், சிவாஜி, சிவாஜினி ஆகியோராவர்.

இவர்களில் சிரேஷ்ர புத்திரி **கமலேஸ்வரியே** இங்கு நினைவு கூரப்படுபவர் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த இரு தம்பியரான கமலேசன், சிவாஜி ஆகியோர் அவுஸ்திரேலியாவில் பொறியியலாளர்களாக (Engineers) கடமை ஆற்றுகிறார்கள்.

தங்கை சிவாஜினி அவுஸ்திரேலியாவில் அரச பதவி வகிக்கிறார். 84-ம் ஆண்டில் தந்தையார் இறந்த பின் தாயாரும் அவுஸ்திரேலியா சென்று வசித்து வருகிறார்.

முதலில் நான்கு புத்திரச் செல்வங்களை இழந்த பெற்றோர் ஐந்தாவதாக **கமலேஸ்வரி** பிறந்ததும் கண்ணும் கருத்துமாகப் பராமரித்தனர். 19.2.1951இல் பிறந்த **சிறுமி கமலேஸ்வரி** கொழும்பு விவேகாநந்த சபையில் தனது பாலர் கல்வியை (L.K.G) ஆர்வமுடன் தொடங்கியவர், தந்தையாரின் இடம் மாற்றம் காரணமாக யாழ் நகரில் கல்வியைத் தொடர்ந்தார்.

1924ம் ஆண்டு மணிக்கூட்டு வீதியில், தமது அயலிலே ஒரு இந்து ஆரம்பப் பாடசாலையை நிறுவி திறம்பட நிர்வகித்து வந்தனர் கமலேஸ்வரியின் பெரிய தகப்பன் முறையான வைத்திலிங்கம் மற்றும் பொன்னம்பலம் போன்ற இன்னும் சில பெரியவர்கள். சிறுமி கமலேஸ்வரி பாலர் வகுப்பு (U.K.G)யில் இருந்து 2-ம் வகுப்பு வரை அதே இந்து ஆரம்ப பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றார். 3-ம் வகுப்பில் இருந்து G.C.E (A/L) வகுப்பு வரை வேம்படி மகளிர் கல்லூரியில் திறம் பட கல்வியைத் தொடர்ந்தார். க.பொ.த. (உ.த) (+ 2) பரீட்சையில் கலைத்துறைப் பாடங்களை எடுத்து முதற் தடவையிலேயே சித்தி அடைந்தார். அதனைத் தொடர்ந்து வர்த்தகத் துறைப் பாடங்களையும் எடுத்து ஒரே தடவையில் மீண்டும் சித்தி அடைந்தார்.

அதன்பின் இலங்கை கல்வித்திணைக் களத்தின் பல் தொழில் நுட்பக் கல்லூரியில் சேர்ந்து 4 ஆண்டுகால பயிற்சி நெறியான வர்த்தக டிப்புளோமா (Diploma in Commerce)ஐ 1976ம் ஆண்டில் பூர்த்தி செய்தார்.

அதன்பின் **செல்வி. கமலேஸ்வரியின்** திறமையைக் கண்டு அவர் படித்த கல்லூரிகளான யாழ். பல்தொழில் நுட்பக் கல்லூரியும், வேம்படி மகளிர் கல்லூரியும் தமது கல்லூரிகளில் பகுதி நேர விரிவுரையாளராக பணியை மேற்கொள்ளும்படி அழைத்தன. இதே வேளை Jaffna Education Centre என்ற தனியார் கல்வி நிலையமும் இவரின் ஆசிரிய சேவையை நாடியது.

சம காலத்தில் இம்மூன்று கல்வி நிறுவனங்களிலும் பகுதிநேர விரிவுரையாளராக தனது திறமையை நிலை நாட்டினார். பல்தொழில் நுட்பக் கல்லூரியில் Accounting Including Cost Accounting என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடமும், மற்றய இரு கல்வி நிறுவனங்களிலும் வர்த்தகம் (Commerce) என்ற பாடமும் அவரால் போதிக்கப்பட்டன.

சில காலம் இப்பணிகளைச் செய்தபின் 1979இல் யாழ். பல்கலைக் கழகத்தின் நிதிக் கிளையில் (Finance Brance) பயிலுனராகப் பணியாற்றினார். அதன்பின் 20.6.80இல் அனுராதபுரம் கல்வித் திணைக் களத்தில் கணக்குப் பதிவாளராக (Book Keeper) முதன் முதலில் அரச பதவியில் நியமனம் பெற்றார். அதனைத் தொடர்ந்து பெண்களுக்கு மிகவும் பொருத்தமானதும், நீண்ட விடுமுறையுடனும் கூடிய தொழில் ஆசிரியத் தொழில் எனக் கருதி அத்தொழிலுக்காக விண்ணப்பித்தார். அவரின் விருப்பப்படியே 2.5.83இல் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் வர்த்தகப் பட்டதாரி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அதன்பின் செம்மலை மகா வித்தி யாலயம், முல்லைத்தீவு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கடமை ஆற்றி சொந்த மாவட்டமான யாழ். மாவட்டத்தில் கதீஜா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்திற்கு 15.5.87இல் இடமாற்றம் பெற்றார். அதன்பின் சென்.ஜேம்ஸ் மகளிர் மகா வித்தியாலயம், யாழ். வண்ணார் பண்ணை நாவலர் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் பணிபுரிந்தார். வண்.நாவலர் மகா வித்தியாலயத்தில் பணிபுரிந்து கொண்டே இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் (Open University of Sri Lanka) பட்ட பின் கல்வி டிப்ளோமா (Post Graduate Diploma in Education) வெற்றிகரமாக 1992இல் பூர்த்தி செய்தார். 15.3.96இல் தனது 45ம் வயதில் விருப்ப ஓய்வு பெறும் வரை அதே பாடசாலையில் திறம்பட சேவையாற்றினார். 1995ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் (10ம் வகுப்புக்குரியது) அவர் கற்பித்த மாணவர்கள் அனைவரும் தேறியமை பாராட்டத் தக்கதாக அமைந்தது. இது அவர் ஓய்வு பெறும் போது கிடைத்த வெகுமதியாக அமைந்தது.

## திருமண வாழ்க்கை

வீமன்காமம் வடக்கு தெல்லிப்பளையில் வசித்து அமரத்துவம் அடைந்த பிரபல ஆங்கில ஆசிரியர் சிவகுருநாதன் சுப்பிரமணியம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் புத்திர செல்வங்கள் மூவர் மூத்தவர் விஞ்ஞான ஆசிரியரான **கணேசலிங்கம்**, அடுத்தவர் பத்மினி தேவி. இவர் லண்டன் கணக்காளர் பரீட்சையில் தேர்ச்சி பெற்று கொழும்பில் சுயமாக தொழில் செய்கிறார். இளையவர் ஸ்ரீ காந்தலிங்கம். இவர் லண்டனில் சட்டத்துறையில் சொந்த நிறுவனம் ஒன்றை அமைத்து நிருவகிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலேஸ் ஆசிரியை தனது 30ம் வயதில் 10.9.80இல் ஆசிரியர் கணேசலிங்கத்தை வதுவை செய்தார். இதன் பலனாகப் பெற்றெடுத்த ஏகபுத்திரி **தாக்ஷாஜினி** யாவார். ''சிப்பியின் வயிற்றில் ஒரே ஒரு முத்து தான் பிறக்கும்''. அதே போலவே தன் வயிற்றில் தாக்ஷா பிறந்துள்ளதாக சொல்லுவார் ஆசிரியை கமலேஸ்வரி. 6.10.81இல் பெற்ற இம் முத்திற்காகவே தான் தினமும் சமையல் செய்கிறேன் என்பார். இச்சிப்பி முத்தின் நலன் கருதி சாவகச்சேரி கோட்ட கல்வி அலுவலகத்தில் சேவைக் கால ஆசிரிய ஆலோசகராக (In Service Adviser) கடமையாற்றிய கணவனையும் விருப்ப ஓய்வு பெறச்செய்து சொந்த வீட்டை, சொத்தை, உறவினர்களை, உத்தியோகத்தை, சொந்தநாட்டை எல்லாம் துறந்து தாய்த்தமிழகத்தை அடைக்கலம் அடைந்தார்.

கணவன், தமது உறவினர்களால் ஆரம்பிக்கப்பட்ட சைவ பாடசாலையில் (பிற்காலத்தில் சன்மார்க்க மகா வித்.) ஆசிரியராகவும், உப அதிபராகவும் சிலகாலம் அதிபராகவும் பணிபுரிந்தமையைப் பற்றியும் சாவகச்சேரியில் சேவையாற்றும்போது நல்லாசிரியரிற்கான சான்றிதழ் பெற்றமையையும் எண்ணிப் பெருமைப்படுவார்.

2.6.96இல் தமிழகத்தின் தலைநகர் சென்னையை அடைந்த போது பல கனவுகளுடன் வந்தவர் குறுகிய காலத்திலேயே நோய் வாய்ப்பட்டார். 22.5.98இல் அவரைப் பீடித்த நோய் ஆட்கொல்லியாக இருந்தும் அதனைப் பற்றிப் பொருட்படுத்தாது தனது கருமங்களை ஆற்றினார்.

அண்மையில் தாயகம் திரும்ப வேண்டும் என தீர்மானித்து குடும்ப வருவாயைப் பெருக்கும் நோக்கில் தையல், ஓவியம், பொம்மை செய்தல், பூ செய்தல் போன்ற கைத்திறனை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டார். வேகமாக மாறி வரும் எதிர்காலத்தை எதிர் நோக்க வேண்டும் என்ற நோக்கில் கம்ப்யூட்டர் துறையிலும் சிறிது ஈடுபாடு காட்டினார்.

அவரது விடா முயற்சியும், தொலை நோக்குப் பார்வையுடனான சிந்தனையும் பிறருக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

மகள் தாக்ஷாஜினி High Tech Aestheticienne Course என்ற அலங்காரக் கலையைப் பயின்றதுடன், உயர் கல்வியையும் தொடர்கிறார்.

கமலேசின் கணவனாகிய நான் சில வாரங்களின் முன் சிறிது உடல் நலக்குறைவினால் வீட்டிலேயே சில தினங்கள் ஓய்வு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் தனது உடல் நலனையும் பொருட்படுத்தாது வீட்டு வேலைகளையும், வெளி வேலைகளையும் தானே செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்காக அவர் வருந்தியதையும் நானே கண்ணுற்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் மறைவிற்கு அவரின் நோய் மாத்திரமல்ல என்னால் ஏற்பட்ட மன வேதனையும், உடல் சோர்வும் கூட காரணமாக அமைந்து விட்டது என எண்ணுகிறேன்.

அன்னார் சிறு வயதில் இருந்தே யாழ் நகரில் கன்னாதிட்டியில் எழுந்தருளியிருக்கும் காளி தேவி, வண்ணை வெங்கடேசப் பெருமாள் மற்றும் மணிக் கூட்டு வீதியில் உள்ள அரசடி வினாயகர் ஆகிய கோவில் களின் மீது பற்றுள்ளவர். அதே போலவே தமிழகம் வந்தபின் மயிலை கபாலீஸ்வரர் - கற்பகாம்பாள், மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி, மாங்காடு காமாட்சி, திருவேற்காடு கருமாரி, காஞ்சி காமாட்சி ஆகிய கோவில் களுக்கு அடிக்கடி போவார். சில தினங்களுக்கு முன் சிவராத்திரியின் போது திருவான்மியூர் மருத்தீஸ்வரர் மற்றும் பெசன்நகர் இரத்தின கிரீஸ்வரர் ஆகிய இரு ஆலயங்களுக்கும் சென்று வந்தார்.

நாம் மூவரும் சேர்ந்து ஒரு மித்து இறுதியாகப் போய் வந்த கோவில் திருத்தணி முருகன். தஞ்சை பெரிய கோவிலுக்கும், திருப்பதிக்கும், காளகஸ்திக்கும் ஒருமுறை போக வேண்டும் என்றார். அதற்குள் அவரே எம்மை விட்டு எங்கோ போய் விட்டார்.

**''திருத்தணி முருகன் வழித்துணை வருவான்'' என்பார்களே.**
**அவன் வருவானா! துணை புரிவானா!!**
**நிச்சயம் வருவான் துணைபுரிவான்.**
**நீ பல்லாண்டு வாழ்வாய்.**

**- கணவன் -**

# தாய்க்கு மகள் எழுதியது

**13.3.2005**

**அன்புள்ள அம்மா,**

**கோயில் தெய்வம் போல் தோன்றி என்னை வளர்த்து விட்டீர்களே அம்மா. இன்னும் சில காலம் வாழலாமே. உறவினர் எல்லோரின் நடத்தையையும் நன்கு விளங்கிக் கொண்டு எம்மை அவர்களிடம் பாதுகாப்பாக விட்டுப்போய் வேறொரு உலகம் அடைந்து கொண்டீர்களா அம்மா?**

இப்படிக்கு,
மகள்
**க. தாக்ஷாஜினி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நில்லா உடம்பை நிலை என்று எண்ணற்க

இருப்பது பொய், போவது மெய்!
இது இயற்கை நியதி...
கருத்தில் இதை ஏற்று உந்தன்
கடமைகளை யாற்று!
செருக்ககற்றி, சினந்தவிர்த்து
சிந்தையிலே அன்பைப்
பெருக்கிடுவாய் வாழ்விலே -
- பேரின்ப நிலை காண்பாய்:

வருந்துகின்ற துன்பத் தீயில்
வாடி மனம் வெந்து
உருக்குலைந்து போவதும் வீண்,
உறுதி கொண்டு நெஞ்சில்
அருட் கடலாம் ஆண்டவனை
அனுதினமும் நேசி!
திருவடிகள் பற்றி அவன்
திருவருளை யாசி!

- இணுவை சுசீலா. தர்மலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது அன்புத் தெய்வம் கமலேஸ்வரியின் திடீர் மறைவை அறிந்து செய்வதறியாது நாம் திகைத்து நின்ற போது உடனே ஓடிவந்து ஆறுதல் கூறி வேண்டியவை செய்த எமது Flatஇலும் அயல் Flatsஇலும் வசிக்கும் நல் உள்ளங்களுக்கு முதல் கடமைப்பட்டுள்ளோம்.

அடுத்து எனது தொலைபேசி செய்தி கேட்டு உடனே ஓடோடி வந்து அந்த இரவு பொழுதில் நீண்ட நேரம் எம்முடன் நின்று ஆறுதல் கூறி வேண்டிய ஒழுங்குகள் செய்து தந்த நண்பர்கள் உறவினர்களுக்கு எமது நன்றிகள்.

அடுத்து வெளிநாடு, வெளியூர்களில் இருந்து நேரே வந்து இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டும், கடித மூலமும், தொலை பேசியிலும் அனுதாபம் தெரிவித்த அனைத்து உள்ளங்களிற்கும் இருகை கூப்பி நன்றி தெரிவிக்கின்றோம்.

எமது தனிமையைப் போக்குவதற்காக எம்மிடம் அடிக்கடி வந்து தமது வேலைகளையும் பொருட்படுத்தாது தமது நேரத்தைச் செலவிட்ட நண்பர்களுக்கும் மீண்டும் நன்றி.

**- அன்பு மகள், கணவன்.**

S. Ganesalingam
G. Thakshajini
68, Clock Tower Road
Jaffna
Sri Lanka

12, (New No. 42)
T.M.M. Street,
Thiruvanmiyur,
Chennai - 41
India

12.4.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி கமலேஸ்வரி கணேசலிங்கத்தின் வம்சாவழி

## தந்தையின் தந்தை வழி

அம்பலவாணர்
|
கணபதிப் பிள்ளை
|
வைத்திலிங்கம்

## தந்தையின் தாய்வழி

கார்த்திகேசு + மாரிமுத்து

- கனகாம்பிகை (கனகம்மா)
- நடராசா + வடிவாம்பிகை
  - ஞானாம்பிகை
- இராசம்மா + சின்னத்தம்பி
  - மாணிக்க தியாகராஜா
  - மாணிக்கரசி (உருக்கு) + நடராசா
    - (பிள்ளைகள் பெயர் தெரியவில்லை)

வைத்திலிங்கம் + கனகாம்பிகை (கனகம்மா)

- பாக்கியம் + துரையப்பா
- மனோன்மணி + ஐயாத்துரை
  1. பராசக்தி + சுந்தரலிங்கம்
  2. கனகேஸ்வரி + நடராசா
  3. கணேசலிங்கம் + நகுலேஸ்வரி
  4. யோகேஸ்வரி + கணேசலிங்கம்
  5. சண்முகலிங்கம் + கமலராணி
  6. பத்ம லிங்கம் +
  7. சிவபாலன் +
  8. சிவசக்தி + பரிமளநாதன்
- அரச ரத்தினம்
  - காயத்திரி
  - சிவநேசன்
  - காளிதாசன்
  - அருந்தவ நாதன்
  - (நால்வரும் இளம்வயதில் அமரத்துவம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


விநாயகர் கவசம் .......... 7
விநாயகர் அகவல் .......... 10
திருக்கோணமலைப் பதிகம் .......... 16
திருக்கேதீச்சரப் பதிகம் .......... 19
பன்னிரு திருமுறைகள் .......... 23
கோளறு பதிகம் .......... 28
திருநீற்றுப் பதிகம் .......... 32
நமச்சிவாயத் திருப்பதிகம் .......... 38
திருத்தொண்டத்தொகை .......... 55
சிவபுராணம் .......... 66
திருப்பொற்சுண்ணம் .......... 87
திருப்பள்ளியெழுச்சி .......... 93
திருவெம்பாவை .......... 96
திருமந்திரம் .......... 110
திருமுருகாற்றுப்படை .......... 116
பெரியபுராணம் .......... 129
பஞ்சபுராணம் .......... 132
பட்டினத்தார் பாடல்கள் .......... 134
மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் .......... 143
சகலகலாவல்லி மாலை .......... 144
அபிராமியந்தாதி .......... 147
ராகுகால துர்க்கா அஷ்டகம் .......... 168
கந்தர் சஷ்டி கவசம் .......... 179
கந்தரலங்காரம் .......... 187
கந்தரநு பூதி .......... 196
திருப்புகழ் .......... 206
திருமுருகாற்றுப்படை .......... 217
நல்லூர் நாற்பது .......... 231
யோகர் சுவாமிகள் பாடல்கள் .......... 243



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பிள்ளையார் வழிபாடு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா

- ஔவையார்

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கரும மாதலால்
கணபதி என்றிடக் கரும மில்லையே

- திருமூலர்

வெள்ளைக் கொம்பன் விநாயகனே
வினைகள் தீர்க்கும் ஐங்கரனே
அன்னை பராசக்தி அருந்தவப் புதல்வா
ஆனைமுகத்து விநாயகனே (வெ)

- ஔவையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானைப் பதம் பணிவாம்

- கந்தரனுபூதி

ஓதவினை அகலும் ஓங்குபுகழ் பெருகும்
காதல் பொருளனைத்தும் கைகூடும் - சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேல் பாரதப்போர் தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள்.

- பெருந்தேவனார்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

## விநாயகர் துதி

அல்லல்போம் வல்வினைபோம்
அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லைபோம் போம்
போகாத் துயரம்போம்
நல்ல குணமதிக மாமருணைக்
கோபுரத்தில் வீற்றிருக்கும்
செல்வ கணபதியைக்
கைதொழுதக்கால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியசித்திமாலை

## காசிபமாமுனி அருளியது

பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும்
எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி
இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள் அனைத்தும்
எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்புகூரத் தொழுகின்றாம். 1

உலகமுழுதும் நீக்கமற ஒன்றாய்
நிற்கும் பொருள் எவன்அவ்
உலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாதமேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைகண் எவன்அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றாம் 2

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீழும் பஞ்செ‌ன மாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி
கருமம் எவனால் முடியும்அத்
தடவுமருப்புக் கணபதி பொன்
சரணம் சரணம் அடைகின்றாம் 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர்
கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்திநாளும் அறியாமை அகற்றி
அறிவிப்பான் எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றாம். 4

செய்யும் வினை முதல்யாவன்
செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும் அந்தக்
கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றாம் 5

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன்யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதன்எவன்
எண்குணன் எவனப்
போதமுதலைக் கணபதியைப் புகழ்ந்து
சரணம் அடைகின்றாம். 6

மண்ணின் ஓர் ஐங்குணமாகி வதிவான்
எவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின் மூன்றாய்
நவில்வான் எவன் வளியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணும் இரண்டு குணமாகி இயைவான்
எவன் வானிடை ஒன்றாய்
அண்ணல் எவன் அக்கணபதியை அன்பிற்
சரணம் அடைகின்றாம். 7

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
மாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றாம். 8

## பெருமை வாய்ந்த பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார்
பெருமை வாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை ஓரத்தில்
அரச மரத்தின் நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார்
வினைகள் தீர்க்கும் பிள்ளையார்

யானை முகம் கொண்டவர்
ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர்
பக்தர் குறையைத் தீர்ப்பவர்

மஞ்சளிலே செய்யினும்
மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் ஆழ்த்தும் பிள்ளையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுக வேலனுக்கு
அண்ணனா பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும்
நீக்கி வைக்கும் பிள்ளையார்

அவல் கடலை சுண்டலும்
அரிய மோதகங்களும்
கவலையின்றித் தின்னுவார்
கருணைமாரி பொழிகுவார்

கலியுகத்து விந்தைகளைக்
காணவேண்டி அனுதினம்
எலியின் மீது ஏறியே
இஷ்டம் போலச் சுற்றுவார்

மதம்மூன்றும் ஆறாக வருங்களிற்று
முகத்தானை மனத்தி லேதான்
பதம்ஊன்றும் அருந்தவர்க்கும் பதம்மூன்று
கடந்தபதம் பாலிப் பானை

விதம்மூன்று புரம்கடிந்தார் அளித்துஅருளும்
ஒருமுதலை வேரோ டேசஞ்
சிதம்மூன்று பிறப்புஒழிக்கும் ஆனைதிறை
கொண்டவனைச் சிந்தை சேர்ப்போம்

- சைவஎல்லப்ப நாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கவசம்

## கச்சியப்ப சுவாமிகள் அருளியது

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியைஎன்றும் வியங்கியகா
சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க.

கவின்வளரும் அதரம்கச முகர்காக்க
தாலாங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க அள்ளழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க.

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளம் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கஅகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் இரண்டையும்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக ணத்தை அல்லல்
உக்ககண பன்காக்க ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க.

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்கஇரு
பதம்ஏக தந்தர் காக்க
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர்காக்க
விரல்பதும அத்தர் காக்க
கேழ்கிளரும் நகங்கள் விநா
யகர்காக்க கிழக்கினிற்புத் தீசர்காக்க

அக்கினியிற் சித்தீசர் காக்கஉமா
புத்திரர்தென் ஆசைகாக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழ்உ தீசி
தக்கநிதி பன்காச்க வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்கஇர
வினும்சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கஇராக்
கதர்பூதம் உறுவே தாளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகினிப்பேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலமும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க

மதிஞானம் தவம்தானம் மானம்ஒளி
புகழ்குலம்வண் சரீரம் முற்றும்
பதிவான தனம்தானி யம்கிருகம்
மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்து சர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக்காக்க.

வென்றிசீ விதம்பகபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்ஓ
திடினும்பால் இடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்காள் அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்றஆங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.

உண்டுடுத்தி உறங்கியெழுந் தோயாம லலைந்தென்ன
கண்டெடுத்த மாமுதல்கல் யாணபுரிக் கணபதிக்கும்
தண்டனிட்டார்க் கின்னருள்கூர் தேசிகரா மன்னவர்க்கும்
செண்டுமல்லி மாலையிட்டுச் செந்தமிழ் வாழ்ந்திட வாழ்வே.

## (வெண்பா)

எல்லா உயிர்க்குயிரா யாளுமிறை ஈசனுமை
கல்யாணஞ்சேர் மடத்தைக்கண் பார்த்திவ் - வெல்லையிலே
காவற்குப் பல்லக்குப் பூதத்தைக் காக்கவைத்தே
யாவர்குஞ் சித்தம் நிறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்,
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்தே
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து,
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்,
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி,
ஐம்புலன் றன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்,
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத் திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே,
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்,
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி,
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்,
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்,
சண்முக தூலமுஞ் சதுர்முகச் சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்,
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தினிற் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிதெனக் கருளி,
என்னை அறிவித், தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே,
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தி, என்செவியில்
எல்லை இல்லா ஆனந் தமளித்து
அல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்,
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி,
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்,
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்,
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.

**விநாயகர் அகவல் முற்றிற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபெருமான் வழிபாடு

## 108 போற்றி

### அப்பரடிகள் அருளியது

| | |
|---|---|
| கற்றவர்கள் உண்ணுங் கனியே | போற்றி |
| கழலடைந்தார் செல்லுங் கதியே | போற்றி |
| அற்றவர்கட் காரமுகம் ஆனாய் | போற்றி |
| அல்லலறுத் தடியேனை ஆண்டாய் | போற்றி |
| மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா | போற்றி |
| வானவர்கள் போற்றும் மருந்தே | போற்றி |
| செற்றவர்தம் புரமெரித்த சிவனே | போற்றி |
| திருமூலட் டானனே போற்றி | போற்றி |
| வங்கமலி கடல்நஞ்சம் உண்டாய் | போற்றி |
| மதயானை ஈருரிவை போர்த்தாய் | போற்றி |
| கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் | போற்றி |
| கொல்புலித்தோல் ஆடைக் குழகா | போற்றி |
| அங்கணனே அமரர்கள்தம் இறைவா | போற்றி |
| ஆலமா நீழலறஞ் சொன்னாய் | போற்றி |
| செங்கனகத் தனிக்குன்றே சிவனே | போற்றி |
| திருமூலட் டானனே போற்றி | போற்றி |
| மலையான் மடந்தை மணாளா | போற்றி |
| மழவிடையாய் நின்பாதம் போற்றி | போற்றி |
| நிலையாக என்னெஞ்சில் நின்றாய் | போற்றி |
| நெற்றிமேல் ஒற்றைக் கண் உடையாய் | போற்றி |
| இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தீ | போற்றி |
| ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் | போற்றி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதம் படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனேநின் பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா போற்றி
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
வம்புலவு கொன்றைச் சடையாய போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்புமவர்க் கரும் பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்கம் ஆனாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி
உலகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணிந்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
பூவார்த்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்த்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி அளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை ஆண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளுஞ் போற்றி
சிரம் நெரிந்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலைப் பதிகம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளியது

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பெருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலை யமர்ந்தாரே 1

கடிதென வந்த கரிதனை யுரித்து
வவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன மடவாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலை யமர்ந்தாரே 2

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ னாகத்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரே 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் றேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்புயுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோண மாமலை யமர்ந்தாரே 4

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பானீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோண மாமலை யமர்ந்தாரே 5

பரிந்து நன்மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லைக் கொடிவிடும் பொழில்சூழ்
கோண மாமலை யமர்ந்தாரே 6

எடுத்தவன் றருக்கை யிழிந்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோண மாமலை யமர்ந்தாரே 7

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோண மாமலை யமர்ந்தாரே 8

நின்றுணுஞ் சமணு மிருந்துணுந் தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லிய லொடு முடனாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோண மாமலை யமர்ந்தாரே 9

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணாமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்து
முரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே 10

திருச்சிற்றம்பலம்

*சுவாமி, தேவி திருநாமங்கள் - கோணேசுரர், மாதுமையாள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரப் பதிகம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளியது

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

விருதுகுன்றமாமேருவினாணரவாவனலெரியம்பாப்
பொருதுமூவெயில் செற்றவன் பற்றிநின்றுறைபதி யெந்நாளும்
கருதுகின்றவூர்கனைகடற்கடிகமழ்பொழிலணிமாதோட்டம்
கருதநின்றகேதீச்சரங்கை தொழக்கடுவினையடையாவே. 1

பாடல்வீணையர் பலபலசரிதையரெருதுகைத்தருநட்டம்
ஆடல்பேணுவரமரர்கள் வேண்டநஞ்சுண்டிருள்கண்டத்தர்
ஈடமாவதுவிருங்கடற்கரையினிலெழிறிகழ்மாதோட்டம்
கேடிலாத கேதீச்சரந்தொழுதெழக்கெடுமிடர் வினைதானே 2

பெண்ணோர்பாகத்தர் பிறைதவழ்சடையினரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ணமாதிரித்தாடுவர் பாடுவரகந்தொறுமிடுபிச்சைக்
குண்ணலாவதோரிச்சையினுழல் பவருயர்தருமாதோட்டத்
தண்ணனண்ணுகேதீச்சரமடைபவர்கருவினையடையாவே 3

பொடிகொண்மேனியர் புலியதளரையினர் விரிதருகரத்தேந்தும்
வடிகொண்மூவிலைவேலினர்நூலினர் மறிகடன்மாதோட்டத்
தடிகளாதரித்திருந்தகேதீச்சரம் பரிந்தசிந்தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல்லார்தம்மேன் மொய்தெழும்வினைபோமே 4

நல்லராற்றவுஞானநன்குடையர் தம்மடைந்தவர்க்கருளீய
வல்லார்பார்மிசைவான்பிறப்பிறப்பிலர் மலிகடன்மாதோட்டத்
தொல்லையில்புக ழெந்தைகேதீச்சரமிராப்பகனினைந்தேத்தி
அல்லலாசறுத்தரனடியிணை தொழுமன்பராமடியாரே 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேழைவார்சடைபெருந்திருமகடனைப் பொருந்தவைத்தொருபாகம்
மாழையங்கயற்கண்ணிபாலருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழையம்பொழின்மந்திகள்களிப்புறமருவியமாதோட்டக்
கேழல்வெண்மருப்பணிந்தநீண்மார்பர்கேதீச்சரம்பிரியாரே 6

பண்டுநால்வருக்கறமுரைத் தருளிப் பல்லுலகினிலுயிர் வாழ்க்கை
கண்டநாதனார் கதலிடங்கை தொழக்காதலித்துறைகோயில்
வண்டுபண் செயுமாமலர்ப்பொழின்மஞ்ஞை நடமிடுமாதோட்டம்
தொண்டர்நாடொறுந்துதி செயவருள் செய்கேதீச்சரமதுதானே 7

தென்னிலங்கையர் குலபதிமலைநலிந் தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்னலங்கெடவடர்த்தவற்கருள் செய்ததலைவனார் கடல்வாயப்
பொன்னிலங்கிய முத்துமாமணிகளும் பொருந்தியமாதோட்டத்
துன்னியன் பொடுமடி யவரிறைஞ்சுகேதீச்சரத்துள்ளாரே 8

பூவுளானுமப்பொருகடல் வண்ணனும்புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடிநுன்னடியிணைகாண்கிலா வித்தகமென்னாகும்
மாவும் பூகமுங்கதலியுநெருங்குமா தோட்டநன்னகர்மன்னித்
தேவிதன்னொடுந்திருந்து கேதீச்சரத்திருந்தவெம்பெருமானே 9

புத்தராய்ச்சிலபுனைதுகிலுடையவர் புறனுரைச் சமணாதர்
எத்தராகி நின்றுண்பவரியம்பியவேழைமை கேளேன்மின்
மத்தயானையைமறுகிடவுரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர்மன்னுபாலாவியின் கரையிற்கேதீச்சரமடைமின்னே 10

மாடெலாமுணமுரசெனக்கடலின தொலிகவர்மாதோட்டத்
தாடலேறுடையண்ணல்கேதீச்சரத்தடிகளை யணிகாழி
நாடுளார்க்கிறைஞானசம்பந்தன் சொனவின்றெழுபாமாலைப்
பாடலாயினபாடுமின்பக்தர்கள் பரகதிபெறலாமே 11

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரப் பதிகம்

## சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது

பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசுவேறிந் நனைகவிழ்வாய்
மத்தம்மதயானையுரி போர்த்தமணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழுபாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்றிருக்கேதீசரத்தானே 1

சுடுவார் பொடிநீறுந்நல துண்டப்பிறைக்கீளும்
கடமார்களியானையுரி யணிந்த கறைக்கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறைகின்றான்றிருக்கேதீச் சரத்தானே 2

அங்கம்மொழியன்னாரவரமரர் தொழுதேத்த
வங்கம்மலி கின்றகடன் மாதோட்ட நன்னகரில்
பங்கம்செய்த பிறைசூடினன் பாலாவியின்கரைமேல்
செங்கண்ணரவசைத்தான்றிருக்கேதீச் சரத்தானே 3

கரியகறைக் கண்டன்னல கண்மேலொருகண்ணான்
வரியசிறைவண்டியாழ் செயுமா தோட்டநன்னகருள்
பரியதிஃர யெறியாவருபாலாயினின் கரைமேல்
தெரியும் மறைவல்லான்றிருக்கேதீச்சரத்தானே 4

அங்கத்துறுநோய் கள்ளடியார் மேலொழித்தருளி
வங்கம்மலிகின்றகடன்மா தோட்ட நன்னகரில்
பங்கஞ் செய்தமடவாளொடுபாலா வியின்கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யவினையா யவ்வடியார் மேலொழித்தருளி
வையமலிகின்றகடன் மாதோட்ட நன்னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத்தானே 6

ஊனத்துறுநோய்கள்ளடியார் மேலொழித்தருளி
வானத்துறுமலியுங் கடன்மா தோட்ட நன்னகரில்
பானத்துறுமொழி யாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத் தெயிறணிந்தான்றிருக் கேதீச் சரத்தானே 7

அட்டன்னழகா கவ்வரைதன் மேலரவார்த்து
மட்டுண்டுவண்டாலும் பொழின்மா தோட்ட நன்னகரில்
பட்டவ்வரிநுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்னமையாள் வான்றிருக்கேதீச் சரத்தானே 8

மூவரெனவிருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனிதூங்கும் பொழின்மா தோட்ட நன்னகரில்
பாவம் வினையறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்னெனையாள்வான்றிருக்கேதீச்சரத்தானே 9

கறையார் கடல் சூழ்ந்த கழிமாதோட்ட நன்னகருள்
சிறையார் பொழில்வண்டியாழ் செயுங்கேதீச்சரத்தானை
மறையார் புகழூரன்னடித்தொண்டன்னுரைசெய்த
குறையாத்தமிழ்பத்துஞ் சொலக் கூடாகொடுவினையே 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறைகள்

## முதலாந்திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் நட்டபாடை

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

திருப்பாச்சிலாச்சிராமம் தக்கராகம்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடம்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோல மெலாம்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர்மாண்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநள்ளாறு பழந்தக்கராகம்

போகமார்த்த பூண்முலையா டன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

திருத்தோணிபுரம் பழந்தக்கராகம்

சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் றிருநாம மெனக்கொருகாற் பேசாயே.

திருவண்ணாமலை நட்டபாடை

உண்ணாமலை யுமையாளொடு முடனாகியவொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணமறுமே.

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடுதீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்டுளிசிதற
ஆமாம்பிணை யணையும்பொழி லணாமலையண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினையிலரே.

தக்கேசி

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின்னிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சார லண்ணாமலையாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோலக்கா தக்கராகம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங்கொண்ட வுருவ மென்கொலோ.

திருப்பழனம் தக்கேசி

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பாவெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே.

கோயில் குறிஞ்சி

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

திருச்சிராப்பள்ளி குறிஞ்சி

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே(று)
ஒன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவையாறு — மேகராகக் குறிஞ்சி

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென்
றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.

திருவலிவலம் — வியாழக் குறிஞ்சி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

திருத்தருமபுரம் — யாழ்மூரி

மாதர்ம டப்பிடியும் மடவன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படை நின் றிசைபாடவு மாடுவ
ரவர் படர் சடைந்நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங் கும லர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயி றருமபு ரம்பதியே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

திருமருகல் இந்தளம்

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ விவளுண் மெலிவே.

திருமயிலாப்பூர் சீகாமரம்

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

திருப்புள்ளிருக்கு வேளூர் சீகாமரம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

கீதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகம்

பண்: பியந்தைக் காந்தாரம் இராகம்: நவரோசு

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடம் உண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி,
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி,
சனி,பாம்பு இரண்டும் உடனே
ஆசுஅறும்; நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பு இலங்க
எருது ஏறி, ஏழை உடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றோடு ஏழு பதினெட்டொடு, ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்,
அன்பொடு நல்லநல்ல; அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீறு அணிந்து
உமையோடும், வெள்ளை விடைமேல்,
முருகு அலர்கொன்றை திங்கள் முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்,
திருமகள், கலை அது ஊதி, செயமாது, பூமி,
திசை தெய்வம் ஆன பலவும்,
அருநெதி நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதி நுதல் மங்கையோடு, வடஆல் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்,
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
கொதி உறு காலன், அங்கி, நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆனபலவும்,
அதிகுணம் நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 4

நஞ்சு அணி கண்டன், எந்தை, மடவாள்தனோடும்
விடை ஏறும், நங்கள் பரமன்,
துஞ்சு இருள், வன்னி, கொன்றை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும், உரும்-இடியும், மின்னும்
மிகையான பூதம் அவையும்,
அஞ்சிடும், நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 5

வாள்வரி அதள்அது ஆடைவரிகோவணத்தர்
மடவாள்தனோடும் உடன்ஆய்,
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்,
கோள்அரி, உழுவையோடு, கொலையானை கேழல்,
கொடு நாகமோடு, கரடி,
ஆள் அரி, நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 6

செப்பு இளமுலை நல்மங்கை ஒருபாகமாக
விடைஏற செல்வன் அடைவார்
ஒப்புஇள மதியும் அப்பும் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பே..டு, குளிரும் வாதம், மிசையான பித்தும்,
வினையான வந்து நலியா,
அப்படி நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்து அன்று, விடைமேல் இருந்து
மடவாள்தனோடும் உடனாய்,
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்
இடர்ஆன வந்து நலியா;
ஆழ்கடல் நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 8

பலபல வேடம் ஆகும்பரன், நாரிபாகன்,
பசு ஏறும் எங்கள் பரமன்,
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்,
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகாலம் ஆன பலவும்
அலைகடல், மேரு நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 9

கொத்து அலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணம் ஆய வேட விகிர்தன்,
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்,
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல; அவை நல்ல நல்ல,
அடியார் அவர்க்கு மிகவே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் அமர் பொழில்கொள் ஆலை விளை செந்நெல் துன்னி,
வளர் செம்பொன் எங்கும் நிகழ,
நான்முகன் ஆதி ஆய பிரமா புரத்து
மறைஞான ஞான முநிவன்,
தான் உறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசு ஆள்வர், ஆணை நமதே. 11

**திருவலஞ்சுழி** **நட்டராகம்**

என்னபுண்ணியஞ் செய்தனைநெஞ்சமே யிருங்கடல்வையத்து
முன்னநீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித்தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடுமதனாலே.

**திருநெல்வாயிலரத்துறை** **பியந்தைக்காந்தாரம்**

எந்தை யீசனெம் பெருமா னேறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புன னிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப் பதிகம்

## திருவாலவாய்

**பண் - காந்தாரம்** **இராகம் - நவரோஸ்**

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயன் திருநீறே 1

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே 2

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணத் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயன் திருநீறே 4

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந் தவத்தோர்க் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயன் திருநீறே 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருத்த மதாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயன் திருநீறே 6

எயிலது வட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவா யான் திருநீறே 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயன் திருநீறே 8

மாலொடு அயனறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமு துண்ட மிடற்றெம் ஆலவாயன் திருநீறே 9

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவாயன் திருநீறே. 10

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீர
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாயே. 11

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

திருவாவடுதுறை காந்தாரபஞ்சமம்

இடரினுந் தளரினும் எனது றுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழு வேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவொஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய் உன்னடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவொஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

திருக்கழுமலம் கொல்லி

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தான்எனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்காளத்தி கொல்லி

சந்தமா ரகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினி லுமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையா ரிணையடி யென்மனத் துள்ளவே.

திருவாலவாய் கொல்லி

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயர னிற்கவே.

பொது கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

திருவாலவாய் திருவிராகம் கௌசிகம்

வீடலால வாயிலாய் விழுமியார்க ணின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

குற்றநீ குணங்கணீ கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ யருத்தமின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் னுரைப்பதென்மு கம்மனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது திருப்பாசுரம் கௌசிகம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருவாலவாய் புறநீர்மை

மங்கையர்க் கரசி வளர்வர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காந் திருமுறை

## திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

**திருவதிகைவீரட்டானம்** **கொல்லி**

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறிந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீட்டா னத்துறை அம்மானே.

**திருவையாறு** **காந்தாரம்**

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கச்சியேகம்பம்** **காந்தாரம்**

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே.

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி யைம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே.

அடுத்தானை யுரித்தானை யருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்தேனே.

# நமச்சிவாயத் திருப்பதிகம்

**பொது** **காந்தாரபஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்த கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுக்கண்பட் டிருக்கினும் இரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினும் அருளின் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே 4

வெந்தநீ றருங்கலம் விரதிகட் கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலம் திகழும் நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே 5

சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க் கல்லால்
நலமிலன் நாள்தொறும் நல்கு வான்நலம்
குலமிலர் ஆகிலும் குலத்துக் கேற்பதோர்
நலம்மிகக் கொடுப்பது நமச்சி வாயவே 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென்று உருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே 7

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே 8

முன்னெறி ஆகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறியே சென்றங் கடைந்தவர்க் கெல்லாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே 9

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் லார்தமக்கு இடுக்கண் இல்லையே 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவொற்றியூர் திருநேரிசை

மனமெனும் தோணிபற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதமெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணாது
உனையுனு முணர்வைநல்கா யொற்றியூ ருடையகோவே.

திருப்பாதிரிப்புலியூர் திருநேரிசை

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே.

திருக்கச்சியேகம்பம் திருவிருத்தம்

கருவுற்ற நாள்முத லாகவுன்
பாதமே காண்பதற்கு
உருகிற்றெ னுள்ளமும் நானும்
கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால
வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங்
காய்கச்சி யேகம்பனே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

**திருக்கடம்பூர்** **திருக்குறுந்தொகை**

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

**கோயில்** **திருக்குறுந்தொகை**

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

அல்ல லென்செயும் அருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே.

**திருமருகல்** **திருக்குறுந்தொகை**

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

**திருஇன்னம்பர்** **திருக்குறுந்தொகை**

என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லுமினி யானொரு வனுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது தனித்திருக்குறுந்தொகை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகட லோத நீ ராடிலென்
எங்கும் ஈசனே னாதவர்க் கில்லையே.

வேத மோதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதி நூல்பல நித்தம் பயிற்றிலென்
ஓதி அங்கமோ ராறு முணரிலென்
ஈச னையுள்கு வார்க்கன்றி யில்லையே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

**கோயில்** **பெரிய திருத்தாண்டகம்**

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

**திருக்காளத்தி** **திருத்தாண்டகம்**

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யான்அவனென் கண்ணு ளானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநல்லூர் திருத்தாண்டகம்

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்னை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருமறைக்காடு திருத்தாண்டகம்

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாரூர் திருத்தாண்டகம்

உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியி னுரு வெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறாது ஆன்ஏறு ஏறி
அமரர்நா டாளாதே ஆரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

திருமணியைத் தித்திக்கும் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்
குருமணியைக் குழல்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தில் அருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெய் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே.

எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

திருஆவடுதுறை திருத்தாண்டகம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் துறையுறையும் அமர ரேறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெய்த்தானம் திருத்தாண்டகம்

தினைத்தனையோர் பொறையிலா வுயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியா லிந்த
அனைத்துலகும் ஆளலா மென்று பேசும்
ஆங்காரந் தவிர்நெஞ்சே யமரர்க் காக
முனைத்துவரு மதில்மூன்றும் பொன்ற அன்று
முடுகியவெஞ் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்தபெருங் கருணையன்நெய்த் தானமென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

திருப்புள்ளிருக்குவேளூர் திருத்தாண்டகம்

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள்தீயெழுத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

திருப்பூந்துருத்தி திருத்தாண்டகம்

நில்லாத நீர்சடைமேல் நிற்பித் தானை
நினையாவென் நெஞ்சை நினைவித் தானைக்
கல்லா தனவெல்லாங் கற்பித் தானைக்
காணா தனவெல்லாங் காட்டி னானைச்
சொல்லா தனவெல்லாஞ் சொல்லி யென்னைத்
தொடர்ந்திங் கடியேனை யாளாக் கொண்டு
பொல்லாவென் நோய்தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருச்சிவபுரம்** **திருத்தாண்டகம்**

வானவன்காண் வானவர்க்கு மேலா னான்காண்
வடமொழியுந் தென்றமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்தும் ஆடி னான்காண்
ஐயன்காண் கையிலனல் ஏந்தி யாடும்
காணவன்காண் கானவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறும்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன் றான்காண்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன்தானே.

**திருவானைக்கா** **திருத்தாண்டகம்**

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டன் கொண்டடியேன் என்செய்கேனே.

ஊனாகி உயிராகி யதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே யென்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாய்உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டடியேன் என்செய்கேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது திருத்தாண்டகம்

தந்தையார் தாயார் உடன்பி றந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே.

பொது தனித்திருத்தாண்டகம்

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தீ
நலஞ்சுடரே நால்வேதத் தப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெங் கடவுளானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கொடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.

**பொது** **மறுமாற்றத்திருத்தாண்டகம்**

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

**திருப்புகலூர்** **திருத்தாண்டகம்**

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாந் திருமுறை

## சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்த தேவாரம்

திருச்சிற்றம்பலம்

**திருக்கலயநல்லூர்** **தக்கராகம்**

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடு சென்றவள்தன் குணத்தினை நன்கறிந்து
விரும்புரம்வரம் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியஊர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே.

**திருக்கோளிலி** **நட்டராகம்**

நீள நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்டமடவா ளவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே.

**திருவெண்ணெய்நல்லூர்** **இந்தளம்**

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூருட்டுறையுள்
ஆயாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே.

திருமழபாடி நட்டராகம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

திருப்புகலூர் கொல்லி

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

திருப்பாண்டிக்கொடுமுடி பழம்பஞ்சுரம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி வாயவே

ஓவு நாள்உணர் வழியும்நாள் உயிர்போகும் நாள்உயர் பாடை மேல்
காவுநாள் இவை என்றலாற்கரு தேன்கிளர் புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்திழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவொற்றியூர்** **தக்கேசி**

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படற் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே.

**திருக்கடவூர் மயானம்** **பழம்பஞ்சுரம்**

மருவார் கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரான் இந்திரற்குந் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.

**திருப்புன்கூர்** **தக்கேசி**

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வன்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடிய டைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.

நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரயன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லன்என் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூரு ளானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கோலக்கா** **தக்கேசி**

நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும்
ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும்
தன்மை யாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்
அங்க ணன்றனை எண்கணம் இறைஞ்சும்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே.

**திருவாரூர்** **தக்கேசி**

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறிய வொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே.

**திருத்தினைநகர்** **தக்கேசி**

நீறு தாங்கிய திருநுத லானை
நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானைக்
குற்ற மில்லியைக் கற்றையஞ் சடைமேல்
ஆறு தாங்கிய அழகனை அமரர்க்
கரிய சோதியை வரிவரால் உகளும்
சேறு தாங்கிய திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மகனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவாரூர்** **செந்துருத்தி**

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

**திருக்கூடலையாற்றூர்** **புறநீர்மை**

வடியுடை மழுவேந்தி மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே.

திருச்சிற்றம்பலம்

# திருத்தொண்டத்தொகை

**திருவாரூர்** **கொல்லிக்கௌவாணம்**

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவதற்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டேழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலரநற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழிறிற் றறிவாற்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணாற் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையேன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட்டு வப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரர் இடக்கண் பெற்ற பதிகம்

**திருக்கச்சியேகம்பம்** **தக்கேசி**

ஆலம்தான் உகந்து அமுது செய்தானை,
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலம்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏந்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 1

உற்றவர்க்கு உதவும் பெருமானை
ஊர்வது ஒன்று உடையான், உம்பர்கோனை
பற்றினார்க்கு என்றும் பற்றவன் தன்னைப்
பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானை
அற்றம்இல் புகழாள், உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றைவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 2

திரியும் முப்புரம் தீப்பிழம்பு ஆகச்
செங்கண் மால்விடை மேல் திகழ்வானைக்
கரியின் ஈர்உரி போர்த்து உகந்தானைக்
காமனைக் கனலா விழித்தானை
வரிகொள் வெள்வளையாள் உமை நங்கை
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை, எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டலம் திகழ் காது உடையானை
கூற்று உதைத்த கொடுந் தொழிலானை
வண்டு அலம்பும் மலர்க் கொன்றையினானை
வாள்அரா மதிசேர் சடையானை
கெண்டை அம் தடங்கண் உமை நங்கை
கெழுமி ஏத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சு உடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 4

வெல்லும் வெண்மழு ஒன்று உடையானை,
வேலை நஞ்சு உண்ட வித்தகன் தன்னை,
அல்லல் தீர்த்து அருள் செய்ய வல்லானை,
அருமறை அவை அங்கம் வல்லானை,
எல்லை இல் புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 5

திங்கள் தங்கிய சடை உடையானை,
தேவ தேவனை, செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காது உடையானை,
சாம வேதம் பெரிது உகப்பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி ஏந்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 6

விண்ணவர் தொழுது ஏத்த நின்றானை,
வேதம்தான் விரித்து ஓத வல்லானை,
நண்ணினார்க்கு என்றும் நல்லவன்தன்னை,
நாளும் நாம் உகக்கின்ற பிரானை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்இல் தொல் புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றும் உடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 7

சிந்தித்துபு என்றும் நினைந்து எழுவார்கள்
சிந்தையில் திகழும் சிவன் தன்னை
பந்தித்த வினைப் பற்று அறுப்பானை
பாலொடு ஆன் அஞ்சும் ஆட்டு உகந்தானை
அந்தம் இல் புகழாள் உமைநங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்தவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 8

வரங்கள் பெற்று உழல், வாள் அரக்கர் தம்
வாலிய புரம் மூன்று எரித்தானை
நிரம்பிய தக்கன்தன் பெரு வேள்வி
நிரந்தரம் செய்த நிட்கண்டனைப்
பரந்த தொல் புகழாள் உமை நங்கை
பரவி ஏந்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டு உடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 9

எள்கல் இன்றி இளமையவர் கோனை
ஈசனை வழிபாடு செய்வாள் போல்
உள்ளத்து உள்கி, உகந்து உமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளம் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித்தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை, எங்கள் பிரானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றம் ஏறு உகந்து ஏற வல்லானை
'பெரிய எம்பெருமான்' என்று எப்போதும்
கற்றவர் பரவப் படுவானைக்
''காணக் கண் அடியேன் பெற்றது''என்று
கொற்றவன், கம்பன், கூத்தன் எம்மானைக்
குளிர் பொழில், திரு நாவல் ஆரூரன்
நற்றமிழ் இவை ஈரைந்தும் வல்லார்
நன்னெறி உலகு எய்துவர்தாமே 11

## சுந்தரர் வலக்கண் பெற்ற பதிகம்

திருவாரூர் செந்துருத்தி

மீளா அடிமை உமக்கே ஆளாய் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே.

விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்ததில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதீரே.

அன்றில் முட்டா தடையுஞ் சோலை ஆரூ ரகத்தீரே
கன்று முட்டி உண்ணச் சுரந்த காலி யவைபோல
என்றும் முட்டாப் படும் அடியார் தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்து போதீரே.

துருத்தி யுறைவீர் பழனம் பதியாச் சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவா ரூரே உடையீர் மனமே யெனவேண்டா
அருத்தியுடைய அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமைப் பணித்தால் வாழ்ந்து போதீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தண் பவளந் திகழுஞ் சோலை இதுவோ திருவாரூர்
எந்தம் அடிகேள் இதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் அடியார் தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ என்றால் வாழ்ந்து போதீரே.

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை சேருந் திருவாரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன்போல் மாலைப் புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தாம் மெலிந்து தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியார் இருந்தால் வாழ்ந்து போதீரே.

ஆயம் பேடை அடையுஞ் சோலை ஆரூ ரகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே ஆமா றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே.

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க் கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை இகழா தேத்துவோம்
பழிதா னாவ தறியீர் அடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே.

பேயோ டேனும் பிரிவொன் றின்னா தென்பர் பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதா னன்றோ கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றும் கிடந்தும் உம்மை இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கென் றுரைத்தால் வாழ்ந்து போதீரே.

காரூர் கண்டத் தெண்டோள் முக்கண் கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே அடிப்பேர் ஆரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொடித்தான்மலைப் பதிகம்

(சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலை செல்லும் வழியில் அருளிச்செய்த பதிகம்)

**திருநொடித்தான்மலை (ஸ்ரீ கயிலாயம்)** **பஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தான் அத றிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயி னேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்த யானை அருள் புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே.

ஆனை உரித்தபகை அடி யேனொடு மீளக் கொலோ
ஊனை உயிர்வெருட்டி ஒள்ளி யானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ் செய்தெனை யேறவைக்க
ஆனை அருள்புரிந்தான் நொடித் தான் மலை உத்தமனே.

மந்திரம் ஒன்றறியேன் மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரி சேசெயுந் தொண்டன்எனை
அந்தர மால்விசும்பில் அழ கானை யருள் புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித் தான்மலை உத்தமனே

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார் தங்கள் வல்வினைப்பட்டு
ஆழ முகந்தவென்னை அது மாற்றி அமரரெல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்டனேன் பரமல்லதொரு
வேழம் அருள்புரிந்தான் நொடித் தான்மலை உத்தமனே

மண்ணுல கிற்பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்ட னேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்ப வெள்ளை யானையின் மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித் தான் மலை உத்தமனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சினை ஒன்றிநின்று அலர் கொண்டடி சேர்வறியா
வஞ்சனை யென்மனமே வைகி வானநன் னாடர் முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்ட னேன்பர மல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித் தான் மலை உத்தமனே.

நிலைகெட விண்ணதிர நிலம் எங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானைஏறி வழி யேவரு வேனெதிரே
அலை கடலால் அரையன் அலர் கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம் நொடித் தான்மலை உத்தமனே.

அரவொலி ஆகமங்கள் அறி வார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெ லாம்வந் தெதிர்ந் திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித் தான்மலை உத்தமனே

இந்திரன் மால்பிரமன் னெழி லார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்த யானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவன் ஆர் என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித் தான் மலை உத்தமனே

ஊழிதோ றூழிமுற்றும் உயர்பொன் நொடித்தான் மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவை நாவல ஊரன்சொன்ன
ஏழிசை இன்றமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சை யப்பர்க் கறிவிப்பதே

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் திருமுறை

## மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த

## திருவாசகம், திருக்கோவையார்

## திருவாசகம்

*திருவாசகச் சிறப்பு*

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவர் நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

### சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகங் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தையடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து(ம்) மண்நிறைந்து(ம்) மிக்காய் விளங்குஒளியாய்
எண்இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்அடிகள் கண்டுஇன்று வீடுஉற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துஉலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்புஅறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓ ரைந்துஉடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
புறம்தோல்போர்த்து எங்கும் புழுவழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராஅமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்உணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றித் திருவகவல்

(தில்லையில் அருளியது)

## சகத்தின் உற்பத்தி

திருச்சிற்றம்பலம்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்று
அடிமுடி யறியு மாதர வதனிற்

கடுமுரண் ஏன மாகி முன்கலந்து
ஏழ்தல முருவ இடந்து பின்னெய்த்தும்
ஊழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகினில்

யானை முதலா எறும்பீ றாய
ஊனமில் யோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா வுதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்

இருமதி விளைவி னொருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களின் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்

ஏழு திங்களிற் றாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்

ஆண்டுகள் தோறும் அடைந்தவக் காலை
ஈண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்துங்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்துங்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்

ஒருங்கிய சாயல் நெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்து
ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்

பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துஞ்
செல்வ மென்னும் அலலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்

புல்வரம் பாய பலதுறை பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின

ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியருஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து

உலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்

தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்து
ஆடியு மலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்

கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்

சதுரிழந் தறிமால் கொண்டு சாரும்
கதியது பரம அதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது
அருபரத் தொருவன் அவனியில் வந்து

குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பின் னாகி முனியாது அத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி

அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்துளி யரும்பச்

சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தகு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி

கூட விலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினு ளாடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி

மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி

இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி

கடையே னடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி

வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி

வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர்வு இறந்த ஒருவ போற்றி
விரிகட லுலகின் விளைவே போற்றி

அருமையி லெளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையு மொருவ னாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி

தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதுங் கடந்தாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி

வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையு மெந்தாய் போற்றி

சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி

ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி

குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்கு
அத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் தமியேன் போற்றி

களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி

பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி

உறவா போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயே னடியேன் போற்றி

இலங்கு சுடரெம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி

திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி

தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி

தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி

எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி

படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த வொருவ போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாமலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி

புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி.

## திருச்சதகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்ட வேட்டு நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம்தீ வினையி னேற்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைநின் தனதாக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலி தனிய னேற்கே.

கேட்டாரும் அறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே.

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வ தொன்றறியேனே.

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரானென்னைத் தாங்கிக்கொள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் மூத்த திருப்பதிகம்

(தில்லையில் அருளியது)

திருச்சிற்றம்பலம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப
தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும்அரு ளைப்புரி
யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்றே.

முன்னின்று ஆண்டாய் எனை முன்னம் யானும்
அதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன் பிற்பட்
டொழிந்தேன் பெம்மானே
என்னின் றருளி வரநின்று போந்திடு
என்னா விடில்அடியார்
உன்னின் றிவனார் என்னாரோ பொன்னம்
பலக்கூத் துகந்தானே.

அரைசே பொன்னம் பலத்தாடும் அமுதே
என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல் ஏசற்
றிருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக் காட்சி
கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப் பேசா
திருந்தால் ஏசாரோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏசா நிற்பர் என்னைஉனக் கடியான்
என்று பிறரெல்லாம்
பேசா நிற்பர் யான்தானும் பேணா
நிற்பேன் நின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ
லக்கஞ் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடும் எந்தாய்
இனித்தான் இரங்காயோ.

அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேல்
என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே
பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோடு உனைப்பிரிந்து வருந்து
வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேல் செத்தே
போனாற் சிரியாரே.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு
திரண்டுஉன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வேறு
இருந்துஉன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா
என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி
இனித்தான் நல்காயே.

நல்கா தொழியான் நமக்கென்றுன் நாமம்
பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா
மனத்தால் நினைந்துருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப் பரவிப்
பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி அருளாய்
என்னை உடையானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீஎன் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்னிரக் கேனே.

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலன்ஓர்கைம் மாறே.

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
மபரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட
முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே.

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட
போதே கொண்டிலையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம்
மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல்
பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென
நினைந் தெமபெம்மாற்கு
அற்றிலா தவரைக் கண்டால் அம்மநாம்
அஞ்சு மாறே.

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினிலர் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருச்சிற்றம்பலம்

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்கு
அறியும்வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

## ஆனந்த மனோலயம்

(தில்லையில் அருளியது)

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
　　ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
　　காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
　　நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
　　திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4

அறுகெடுப் பார்அய னும்மரியும்
　　அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
　　நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
　　திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண்அப்பற்கு
　　ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
　　உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
　　காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
　　நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
　　மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவன் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்ப
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடி
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

(திருப்பெருந்துறையில் அருளியது)

திருச்சிற்றம்பலம்

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுவளர் மொழில்திரு வுத்தர கோச
 மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறுஅது கேட்போம்
 எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
 மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
 பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
 திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
 ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
 விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
 வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
 கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
 எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
 போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
 திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
 படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
 ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

(திருவண்ணாமலையில் அருளியது)

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக்கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்தாட் கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லோரும் வந்தாரோ?
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம் மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலமிடினு முணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோ ரெம்பாவாய்

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணோமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு உன்வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றேவாய் திறப்பாய்
தென்னா என்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென்றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப் பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார்தாள் பணிவோமாங்கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோமேலோ ரெம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் வடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தெண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆர் அயலார்
ஏதவனைப்பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கைபுக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழற்போற்
செய்யா, வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாமார்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனை நீராடலோ ரெம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கணாபனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைதான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆ ரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கி த்தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று ரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்குஅல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் மற்றுஒன்றும் காணற்க
இங்குஇப் பரிசே எமக்குஎம்கோன் நல்குதியேல்
எங்குஎழில்என் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்!
போற்றி அருளுகநின் அந்தம்ஆம் செம்தளிர்கள்!
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றம்ஆம் பொன்பாதம்!
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகம்ஆம் பூம்கழல்கள்!
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறுஆம் இணை அடிகள்!
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்!
போற்றியாம் உய்யஆட் கொண்டு அருளும் பொன்மலர்கள்!
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சிற்றம்பலக்கோவை

திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண்டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி யனநடைவாய்ந்து
உருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே.

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந்தெய்தியதே.

ஈசற் கியான்வைத்த வன்பி னகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென் றவன்தில்லை யின்னொளி போன்றவன்தோள்
பூசத் திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிறபெரு நீளம் பெருங்கண்களே.

ஆநந்த வெள்ளத் தழுந்துமொர் ஆருயிர் ஈருருக்கொண்டு
ஆநந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும் அம்பலஞ்சேர்
ஆநந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆநந்த வெள்ளம்வற் றாதுமுற் றாதிவ் வணிநலமே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாந் திருமுறை

## திருவிசைப்பா

## திருமாளிகைத்தேவர் அருளிச்செய்தது

திருச்சிற்றம்பலம்

கோயில் பஞ்சமம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## சேந்தனார் அருளிச்செய்தது

திருவீழிமிழலை பஞ்சமம்

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## கருவூர்த்தேவர் அருளிச்செய்தது

**திரைலோக்கியசுந்தரம்** **காந்தாரம்**

நையாத மனத்தினனை நைசவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

**கங்கைகொண்ட சோளேச்சரம்** **பஞ்சமம்**

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மா லறியா ஒருவனாம் இருவா!
முக்கணா! நாற்பெருந் தடந்தோள்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

தஞ்சை இராசராசேச்சரம் பஞ்சமம்

உலகெலாம் தொழவந் தெழுகதிர்ப் பருதி
ஒன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ!
அங்ஙனே அழகிதோ அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

## பூந்துருத்தி நம்பிகாடநம்பி அருளிச் செய்தது

திருவாரூர் பஞ்சமம்

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்ததியா இருக்கும் தேவர்காள்! இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்,
சத்தியாய்ச் சிவமாய் உலகெல்லாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
விததுமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோயில்** **சாளரபாணி (ஆனந்தபைரவி)**

அல்லியம் பூம்பழனத் தாமூர்நா வுக்கரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே! தென்தில்லைக்
கொல்லை விடையேறி! கூத்தா டரங்காகச்
செல்வம் நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே.

திருச்சிற்றம்பலம்

## சேந்தனார் அருளிச்செய்த

# திருப்பல்லாண்டு

**கோயில்** **பஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தகர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்த
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக்கு ஆலநிழற்
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனந் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறா அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப்பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தி அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

சேலுங் கயலுந் திளைக்குங்
கண்ணாரிளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கு
மென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலுமயனு மறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலுமமுதமு மொத்து நின்றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

தாதையைத் தாளடுறவீசிய சண்டிக்கிவ்
வண்டத் தொமுடனே
பூதலத்தோரும் வணங்கப்
பொற்கோயிலும் போனகமுமருளிச்
சோதிமணி முடித்தாமமும் நாமமுந்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழலொலி யாழொலி கூத்தொலி
யேத்தொலி யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மமிகு திருவாரூரில்
மழவிடையாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம்
மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

எந்தை யெந்தாய் சுற்றுமுற்று
மெமக்கமுதா மெம்பிரானென் றென்றுமே
சிந்தைசெய் யுஞ்சிவன் சீரடி
யாரடி நாயன் செப்புறை
அந்திமிலா தந்தச் சேத்தனெனைப்
புகுந்தாண்டு கொண்டே ருயிர்மேற்
பந்தம்பிரியப் பரிந்தவனே யென்று
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாந் திருமுறை

## திருமூலநாயனார் அருளிச்செய்த

## திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலாச்
ரன்பே சிவமாவ தாரு மறிகிலா
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருந் தாரே

சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனோடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரருளான்
னிறப்பலி யாவர்க்கு மின்பமருளுந்
துறப்பிலி தன்னைத் தொழுமின் றொழுதான்
மறப்பிலி மாயா விருத்த முயமே.

அப்பனை நந்தியை யாரா வமுதினை
யொப்பிலி வள்ளலை யூழி முதல்வனை
யெப்பரி சாயினு மேத்துமி னேத்தினா
லப்பரி சீசன ருள்பெற லாமே.

பதிபசு பாச மெனப் பகர் மூன்றிற்
பதியினைப்போற் பசு பாசமனாதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதியணுகிற் பசுபாச நில்லாவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு குருவின் றிருமேனிகாண்டல்
தெளிவு குருவின் றிருநாமஞ் செப்ப
தெளிவு குருவின் றிருவார்த்தை கேட்ட
தெளிவு குருவுருச் சிந்தித்தருனே.

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணுயன்
ஆயினும் ஈசன் அருளறி வாரில்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யானே.

நான்பெற்ற வின்பம் பெறுக வில்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடி
னூன்பற்றி நின்ற வுணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே

பிறப்பிலி நாதனை பேர்நந்தி தன்னை
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலா நெஞ்சினுண் மந்திரமாலை
யுறைப் பொடுங் கூடிநின்றோதலுமாமே.

ஊரெல்லாங்கூடி யொலிக்க வழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டைக் கொண்டுபோய்ச் சுட்டிடு
நீரினின் மூழ்கி நினைப் பொழிந்தார்களே

யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசுவுக் கொரு வாயுறை
யாவர்க்கு மாம்முண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர் கின்னுரை தானே.

என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினு
மன்பொடுருகி யகங்குழைவார்க்கன்றி
என்போன் மணியினை எய்தவொண் ணாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையது வாய்வருந் தூயநற் சோதி
துணையது வாய்வருந் நூநற் சொல்லகங்
துணையது வாய்வருந் தூயமலர்க் கந்தந்
துணையது வாய்வருந் தூயநற் கல்வியே

உள்ளத் தொருவனை யுள்ளுறு சோதியை
யுள்ளம் விட்டோரடி நீங்கா வொருவனை
யுள்ளமுந் தானு முடனே யிருக்கினு
முள்ள மவனை யுருவறி யாதே.

உள்ளத்தி னுள்ளே யுணரு மொருவனைக்
கள்ளத்தி னாலுங் கலந்தறி வாரில்லை
வெள்ளத்தை நாடி விடுமவர் தீவினைப்
பள்ளத்திலிட்டதோர் பதத்திலுள் ளாமே.

ஒன்பது வாச லுடையதோர் பிண்டத்து
ளொன்பது நாடி யுடையதோ ரோரிடம்
மொன்பது நாடி யொடுங்க வல்லார்கட்
கொன்பது வாச லுலைகல மாமே.

புண்ணிய பாவ மிரண்டுள பூமியில்
நண்ணும் பொழுதறி வார்சில ஞானிகள்
எண்ணி யிரண்டையும் வேரறுத்தப் புறத்து
அண்ண லிருப்பிட மாய்ந்து கொள்வீரே.

கங்காளன் பூசுங் கவசத்திருநீற்றை
மங்காமற் பூசிமகிழ் வாரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே.

உள்ளம் பெருங்கோயி லூனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசற்
றெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்
படமாடக் கோயிற் பகவற்கதாமே.

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே.

ஒன்றே குலமு மொருவனே தேவனு
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

கூடியு நின்றுந் தொழுதெம் மிறைவனைப்
பாடியுளே நின்று பாதம் பணிமின்க
ளாடியுளே நின்றறிவு செய்வார் கட்கு
நீடிய வீற்றுப் பசுவது வாமே.

விடுகின்ற சீவனார் மேலெழும் போது
நடுநின்று நாடுமினா தன்றன் பாதங்
கெடுகின்ற வல்வினை கேடில் புகழோ
னிடுகின்றா னும்மை யிழையவ ரோடே.

ஏறுடை யாயிறைவா வெம்பிரானென்று
நீறிடுவாரடி யார் நிகழ் தேவர்க
ளாறணி செஞ்சடை யண்ண றிருவடி
வேறணி வார்க்கு வினையில் லைதானே.

முத்தியை ஞானத்தை முத்தமிழோ சையை
யெத்தனை காலமு மேத்துவ ரீசனை
நெய்த்தலை பால்போனி மலனு மங்குமா
னத்தகு சோதி யதுவிரும் பாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே.

என்னை யறிந்திலே னித்தனை காலமும்
என்னை யறிந்தபி னேது மறிந்திலேன்
என்னை யறிந்திட் டிருத்தலுங் கைவிடாது
என்னை யிட்டென்னை யுசாவுகின் றானே.

மாய விளக்கது நின்று மறைந்திடுந்
தூய விளக்கது நின்று சுடர்விடுங்
காய விளக்கது நின்று கனன்றிடுஞ்
சேய விளக்கினைத் தேடுகின் றேனே.

தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிப்பார்கள்
பின்னை வினையைப் பிடத்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே.

ஆசை யறுமின் களாசை யறுமின்க
ளீச னோடாயினு மாசை யறுமின்க
ளாசை படப்பட வாய்வருந் துன்பங்கள்
ளாசை விடவிட வானந்த மாமே.

தத்துவ மாடச் சதாசிவந் தானாடச்
சித்தமு மாடச் சிவசத்தி நானாட
வைத்த சராசர மாடம றையாட
வத்தனு மாடினா னானந்தக் கூத்தே.

நந்தியை யெந்தையை ஞானத் தலைவனை
மந்திர மொன்றுண் மருவிய துகடந்
தந்தர வானத்தி னப்புறத் தப்பர
சுந்தரக் கூத்தனை யென்சொல்லும் வாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசி படர்ந்து கிடந்த குளத்திடைக்
கூசி யிருக்குங் குருகிரை தேர்ந்துண்ணும்
தூசி மாறவன் துணைவழி யெய்திடப்
பாசங் கிடந்து பதைக்கின்ற வாறே.

ஒன்று கண்டீருல குக்கொரு தெய்வமு
மொன்று கண்டீருல குக்குயிராவது
நன்று கண்டீரினி நமச்சிவா யப்பழந்
தின்று கண்டேற்கிது தித்தித்த வாறே.

முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை
யெத்தனை வானோரு மேத்து மிறைவனை
யத்தனைக் காணா தரற்றுகின் றேனையோர்
பித்த னிவனென்று பேசுகின் றாரே.

புகுந்து நின்றான்எங்கள் புண்ணிய மூர்த்தி
புகுந்து நின்றொனெங்கள் போதறி வாளன்
புகுந்து நின்றானடியார் தங்க ணெஞ்சம்
புகுந்து நின்றானையே போற்று கின்றேனே.

பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினொராந் திருமுறை

## நக்கீரதேவநாயனார் அருளிச் செய்த

## திருமுருகாற்றுப்படை

திருச்சிற்றம்பலம்

### திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை

மறுவில் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராஅரை மராஅத்து

உருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோ
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்

பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயீர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்

துவர முடித்த துகளறும் உச்சிப்
பெருத்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக

வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்

வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய ஏன்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்

சூர மகளிர் ஆடுஞ் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் கடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்

சூர்முதல் தடிந்த் சுடரிலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்டு

உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
ஏன்றடு விறற்களம் பாடித் தோள்பெயரா

நிணந்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து

எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயினை பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப

இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்று எடுத்த் சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து

மாடமலி மறுகின் கூடல் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்

அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்து உறைதலும் உரியன், அதாஅன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்

கூற்றத்து அன்ன மாற்றரும் மொய்ம்பின்
கால்கிளர்ந்து அன்ன வேழம் மேல்கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பில் சென்னிப் பொற்ப

நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள்நிற முகனே

மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒரு முகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்த வரம்பொடுத்தன்றே ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே, ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள்போலத் திசைவிளக் கும்மே, ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே, ஒருமுகம்

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே, ஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின் றொழுகலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரந் தாழ்ந்த அம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு

வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க் கேந்திய தொருகை
உக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇய தொருகை
அங்குசங் கடாவ ஒருகை இருகை

ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப ஒருகை
மார்பொடு விளங்க ஒருகை
தாரொடு பொலிய ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப ஒருகை
பாடின் படுமணி இரட்ட ஒருகை

நீல்நிற விசும்பின் மலிதுளிபொழிய ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவைசூட்ட ஆங்குஅப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந்து இசைப்ப வாள்வளை நரல

உரம் தலைக்கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பு ஆறாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே, அதா அன்று.

## திருஆவினன்குடி:

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந்து இயங்கும் யாக்கையர் நண்பகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை

யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துணிஇல் காட்சி முனிவர் முன்புகப்
புகைமுகந்து அன்ன மாசுஇல் தூஉடை
முகைவாய் அவிழ்ந் தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்

நல்யாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்நரம்பு உளர
நோயின்றி இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்னுரை கடுக்கும் திதலையர் இன்னகைப்

பருமந் தாங்கிய பணிந்துஏந்து அல்குல்
மாசுஇல் மகளிரொடு மறுஇன்றி விளங்கக்
கடுவோடு ஒடுங்கிய தூம்புஉடை வால்எயிற்று
அழல்என உயிர்க்கும் அஞ்ஃசுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்

புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமைஅமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்

வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்து
ஈர்இரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெரும் தடக்கை உயர்த்த யானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய

உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்

பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரோடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத்து அன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந்து அன்னசெலவினர் வளியிடைத்

தீஎழுந்து அன்ன திறலினர் தீப்பட
உரும்இடித்து அன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன் அதாஅன்று,

### திருஏரகம் (சுவாமிமலை)

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமைநல் யாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை

மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதுஅறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிச் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப் பாடி
விரைஉறு நறுமலர் ஏந்திப் பெரிதுஉவந்து
ஏரகத்து உறைதலும் உரியன் அதாஅன்று.

## குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடையிடுபு வேலன்

அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறும்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடுஅமை விளைந்த தேக்கள் தேறல்

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல்உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்

முடித்த குல்லை இலைஉடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வால்இணர் இடையிடுபு
கரும்புஉணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண்டு அன்ன மடநடை மகளிரொடு

செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலை தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகர்இல் சேவலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியன் நெடியன் தொடிஅணி தோளன்
நரம்பு ஆர்த்து அன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி
மொன்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே அதன் அன்று.

## பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்

மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
மாண்தலைக் கொடியோடும் மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவி அப்பி ஐதுஉரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுஉடை உடீஇச்

செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇத் தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருத்தண் கணவீர நறுந்தண் மாலை
துணைஉற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியோடு இன்இயம் கறங்க

உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகுஆற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்

கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்தஆறே
ஆண்டு ஆண்டு ஆயினும் ஆகக்காண்தக

முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் கால்உற வணங்கி
நெடும்பெரும் சிமயத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ

ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழைஅணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ

மாலை மார்ப நூல்அறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அருள்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையினர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டுஅமர் கடந்தநின் வென்றுஆடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி

போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரைகுநர் இல்லாப் புலமை யோய்எனக்

குறித்தது மொழியா அளவையில் குறித்துஉடன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்துஎன

இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவுஎன
அன்புஉடை நன்மொழி அளைஇ விளிவுஇன்று
இருள்நிற முந்நீர் வளைஇ உலகத்து
ஒருநீ ஆகத் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்கும்மதி பலவுடன்

வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூஉடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியில் தொடுத்த
தண்கமழ் மலர்இறால் சிதைய நன்பல

ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று

நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்

கோழி வயப்பெடை இரியக் கேழலோடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாஅடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச் சேண்நின்று

இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிசை வெண்பா

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய் - என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத் துறை.

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர்இடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

அஞ்சு முகம்தோன்றில் ஆறு முகம்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்.

முருகனே செந்தி முதல்வேன மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரண்டாந் திருமுறை

## சேக்கிழார் நாயனார் அருளிச் செய்த

# பெரியபுராணம்

## என்று வழங்கும்

# திருத்தொண்டர் புராணம்

திருச்சிற்றம்பலம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்ச்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்றபூங்கழல் போற்றி போற்றி.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

சொல்லுவ தறியேன் வாழி! தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி! என்ன.

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும் பொழுதில்
''உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்'' என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலா் சூட்டினான் சிவபெருமான்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
''பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க'' என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
எற்றைக்கும் திருவரு ளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண்டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடை மேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப்பெருமான்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்த புராணம்

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும்கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய

துய்யதோர் மறைகளாறுந் துதித்திடற்கரிய செவ்வேள்
செய்யபேரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்டவேற் படைவாழ்கவன்னாள்
பொய்யிலை சீரடியார் வாழ்க வாழ்க வாழ்கவிப்புவனமெல்லாம்.

## பஞ்ச புராணம்

அங்கமும் வேதமும் ஓது நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வ மல்கு
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. (தேவாரம்)

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே (திருவாசகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

(திருவிசைப்பா)

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே. (திருப்பல்லாண்டு)

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்தவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார் (திருப்புராணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

## உடல் கூற்று வண்ணம்

### குழிப்புச்சந்தம்

தன தன தான தன தன தான
தந்த தனந்தன தந்த னந்த
தனன தனந்த தனன தனந்த
தானன தானன தானன தந்த-
தந்ததன தான தன தானனா.

ஒருமட மாது மொருவனு மாகி
இன்பசு கந்தரு மன்பு பொருந்தி
உணர்வு கலங்கி யொழுகிய விந்து
ஊறுசு ரோணித மீது கலந்து
பனியிலோர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும அரும்பு கபடமி தென்று
பார்வைமெய் வாய்செவி பால்கைக ளென்ற
உருவமு மாகி வுயிர்வளர் மாதம்
ஒன்பது மொன்று நிறைந்து மடந்தை
உதரம கன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும றிந்து
மகளிர்கள் சேனை தரவணை யாடை
முண்பட வுந்தியு தைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை யமுத மருந்தி
ஓரறி வீரறி வாகி வளர்ந்து
ஒளிநகை யூற லிதழ்மட வாரு
வந்துமு கந்திட வந்துத வழ்ந்து
மடியி லிருந்து மழலைமொ ழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமணி யாடை யரைவட மாட
உண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவிலி ருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரொ டோடிந டந்து

-அஞ்சுவய தாகி விளையாடியே, 1/4

உயர்தரு ஞான குருவுப தேச
முந்தமி ழின்கலை யுங்கரை கண்டு
வளர்பிறை யென்று பலரும்வி ளம்ப
வாழ்பதி னாறு பிராயமும் வந்து
மயிர்முடி கோதி யறுபத நீல
வண்டமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொனி லங்கு பணிகள ணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க
மதனசொ ரூப னிவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழியவெ றிந்து
மாமயில் போலவர் போவது கண்டு
மனதுபொ றாம லவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவம யங்கி இதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி
ஒருமுதலாகிய முதுபொரு ளாயி
ருந்தத னங்களும் வம்பிலி ழந்து
மதனசு கந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறு விரிந்து
வளமையு மாறி யிளமையு மாறி
வன்பல் விழுந்திரு கண்களி ருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாதவி ரோதகு ரோதம டைந்து

-செங்கையினி லோர்த டியுமாகியே, 1/2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவது போவ தொருமுது கூனு
மந்தியெ னும்படி குந்தி நடந்து
மதியும ழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமல் மொழிந்து
துயில்வரு நேர மிருமல்பொ றாது
தொண்டையு நெஞ்சு முலந்து வறண்டு
துகிலுமி ழந்து சுணையும ழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு
கலியுக மீதி லிவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச,
கலகல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
தெளிவுமி ராமல் உரைதடு மாறி,
சிந்தையு நெஞ்சமு லைந்து மருண்டு
திடமுமு லைந்து மிகவும லைந்து
தேறிந லாதர வேதென நொந்து
மறையவன் வேத னெழுதிய வாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்ட மினியென தொந்த
மேதினி வாழ்வுநி லாதினி நின்ற
கடன்முறை பேசு மெனவுரை நாவு
றங்கிவி ழுந்துகை கொண்டுமொ ழிந்து
கடைவழி கஞ்சி யொழுகிட வந்து
பூதமு நாலு சுவாசமு நின்று

-நெஞ்சுதடு மாறி வருநேரமே. 3/

வளர்பிறை போல எயிறுமு ரோம
முஞ்சடை யுஞ்சிறு குஞ்சியும் விஞ்ச
மனதுமி ருண்ட வடிவுமி லங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து
வலைகொடு வீசி யுயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடியில்வி ழுந்து மனைவிபு லம்ப
மாழ்கின ரேயிவர் காலம றிந்து
பழையவர் காணு மெனுமய லார்கள்
பஞ்சுப றந்திட நின்றவர் பந்தர்
இடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியு மென்று
பலரையு மேவி முதியவர் தாமி
ருந்தச வங்கழு வுஞ்சில ரென்று
பணிதுகில் தொங்கல் களபம ணிந்து
பாவக மேசெய்து நாறுமு டம்பை
வரிசைகெ டாம லெடுமென வோடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகிந டந்து சுடலைய டைந்து
மானிட வாழ்வென வாழ்வை நொந்து
விறகிடை மூடி யழல்கொடு போட
வெந்துவி ழுந்து முறிந்துநி ணங்கள்
உருகியெ லும்பு கருகிய டங்கி
ஓர்பிடி நீறுமி லாதவு டம்பை

-நம்புமடி யெனை யினியாளுமே! 1

## தாயாருக்குத் தகனக்கிரியை செய்கையிற்பாடியது

### நேரிசை வெண்பா

ஐயிரண்டு திங்களா அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்-செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி!

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத்-தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலுந் தோள்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து-முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்ந்தெடுத்துத் தாழாமே-அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்?

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்-"உருசியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே!" எனவழைத்த வாய்க்கு?

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்-மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி, "என்றன்
மகனே!" என வழைத்த வாய்க்கு?

கலி விருத்தம்

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே;
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்;
அன்னை யிட்டதீ அடிவ யிற்றிலே;
யானும் இட்டதீ மூள்க மூள்கவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமையம்மை வழிபாடு

## அம்பாள் அர்ச்சனை

### (108 போற்றி)

1. ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி
2. ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
3. ஓம் அருமறையின் வரம்பே போற்றி
4. ஓம் அறம் வளர்க்கும் அம்மையே போற்றி
5. ஓம் அரசிளங் குமரியே போற்றி
6. ஓம் அப்பர் பிணி மருந்தே போற்றி
7. ஓம் அமுத நாயகியே போற்றி
8. ஓம் அருந்தவ நாயகியே போற்றி
9. ஓம் அருள் நின்ற அம்மையே போற்றி
10. ஓம் ஆலவாய்க் கரசியே போற்றி
11. ஓம் ஆறுமுகத்தின் அன்னையே போற்றி
12. ஓம் ஆதியின் பாதியே போற்றி
13. ஓம் ஆலால சுந்தரியே போற்றி
14. ஓம் ஆனந்த வல்லியே போற்றி
15. ஓம் இளவஞ்சிக் கொடியே போற்றி
16. ஓம் இமயத் தரசியே போற்றி
17. ஓம் இடபத்தோன் துணையே போற்றி
18. ஓம் ஈஸ்வரியே போற்றி
19. ஓம் உயிர் ஓவியமே போற்றி
20. ஓம் உலகம்மையே போற்றி
21. ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
22. ஓம் எண்திசையும் வென்றாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. ஓம் ஏகன் துணையே போற்றி
24. ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
25. ஓம் ஐயம் தீர்ப்பாய் போற்றி
26. ஓம் ஒப்பிலா அமுதே போற்றி
27. ஓம் ஓங்கார சுந்தரியே போற்றி
28. ஓம் கற்றோர்க் கினியோய் போற்றி
29. ஓம் கல்லார்க்கும் எளியோய் போற்றி
30. ஓம் கடம்பவன சுந்தரியே போற்றி
31. ஓம் கல்யாண சுந்தரியே போற்றி
32. ஓம் கனகமணிக் குன்றே போற்றி
33. ஓம் கற்பின் அரசியே போற்றி
34. ஓம் கருணை ஊற்றே போற்றி
35. ஓம் கல்விக்கும் வித்தே போற்றி
36. ஓம் கனகாம்பிகையே போற்றி
37. ஓம் கதிரொளிச் சுடரே போற்றி
38. ஓம் கற்பனைகடந்த கற்பகமே போற்றி
39. ஓம் காட்சிக் கினியோய் போற்றி
40. ஓம் காலம் வென்ற கற்பகமே போற்றி
41. ஓம் காமாட்சி அம்பிகையே போற்றி
42. ஓம் காளிகாம்பாள் அம்பிகையே போற்றி
43. ஓம் கிளியேந்திய கரத்தோய் போற்றி
44. ஓம் குலச்சிறை காத்தோய் போற்றி
45. ஓம் குற்றம் பொறுக்கும் குணமே போற்றி
46. ஓம் கூடற்கலாப மயிலே போற்றி
47. ஓம் கோலப் பசுங் கிளியே போற்றி
48. ஓம் சம்பந்தன் ஞானத்தாயே போற்றி
49. ஓம் சக்தி வடிவே போற்றி
50. ஓம் சங்கம் வளர்த்தாய் போற்றி
51. ஓம் சிவகாம சுந்தரியே போற்றி
52. ஓம் சித்தம் தெளிவிப்பாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. ஓம் சிவயோக நாயகியே போற்றி
54. ஓம் சிவானந்த வல்லியே போற்றி
55. ஓம் சிங்கார வல்லியே போற்றி
56. ஓம் செந்தமிழ்த் தாயே போற்றி
57. ஓம் செல்வத்துக் கரசியே போற்றி
58. ஓம் சேனைத் தலைவியே போற்றி
59. ஓம் சொக்கர் நாயகியே போற்றி
60. ஓம் சைவநெறி நிலைக்கச் செய்தோய் போற்றி
61. ஓம் ஞானாம்பிகையே போற்றி
62. ஓம் ஞானப் பூங்கோதையே போற்றி
63. ஓம் தமிழர் குலச்சுடரே போற்றி
64. ஓம் திருவுடை யம்மையே போற்றி
65. ஓம் திசையெல்லாம் புரந்தாய் போற்றி
66. ஓம் திரிபுர சுந்தரியே போற்றி
67. ஓம் திருநிலை நாயகியே போற்றி
68. ஓம் தீந்தமிழ்ச் சுவையே போற்றி
69. ஓம் தெவிட்டாத தெள்ளமுதே போற்றி
70. ஓம் தென்னவன் செல்வியே போற்றி
71. ஓம் தேன்மொழி யம்மையே போற்றி
72. ஓம் தையல் நாயகியே போற்றி
73. ஓம் நற்கனியின் சுவையே போற்றி
74. ஓம் நற்றவத்தின் கொழுந்தே போற்றி
75. ஓம் நல்ல நாயகியே போற்றி
76. ஓம் நீலாம்பிகையே போற்றி
77. ஓம் நீதிக் கரசியே போற்றி
78. ஓம் பக்தர்தம் திலகமே போற்றி
79. ஓம் பழமறையின் குருந்தே போற்றி
80. ஓம் பரமானந்தப் பெருக்கே போற்றி
81. ஓம் பண்ணமைந்த சொல்லே போற்றி
82. ஓம் பல்லுயிரின் தாயே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. ஓம் பவளவாய்க் கிளியே போற்றி
84. ஓம் பசுபதி நாயகியே போற்றி
85. ஓம் பாகம்பிரியா அம்மையே போற்றி
86. ஓம் பாண்டிமா தேவியின் தேவி போற்றி
87. ஓம் பார்வதி அம்மையே போற்றி
88. ஓம் பிறவிப்பிணி தீர்ப்பாய் போற்றி
89. ஓம் பெரிய நாயகியே போற்றி
90. ஓம் பொன்மயி லம்மையே போற்றி
91. ஓம் பொற்கொடி அன்னையே போற்றி
92. ஓம் மலையத்துவசன் மகளே போற்றி
93. ஓம் மங்கள நாயகியே போற்றி
94. ஓம் மழலைக் கிளியே போற்றி
95. ஓம் மண்சுமந்தோர் மாணிக்கமே போற்றி
96. ஓம் மாயோன் தங்கையே போற்றி
97. ஓம் மாணிக்க வல்லியே போற்றி
98. ஓம் மீனவர்கோன் மகளே போற்றி
99. ஓம் மீனாட்சி அம்மையே போற்றி
100. ஓம் முழுஞானப் பெருக்கே போற்றி
101. ஓம் யாழ்மொழி அம்மையே போற்றி
102. ஓம் வடிவழ கம்மையே போற்றி
103. ஓம் வேலனுக்கு வேல் தந்தோய் போற்றி
104. ஓம் வேத நாயகியே போற்றி
105. ஓம் சௌந்தர நாயகியே போற்றி
106. ஓம் வையகம் வாழ்விப்பாய் போற்றி
107. ஓம் அம்மையே அம்பிகையே போற்றி போற்றி
108. ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி போற்றி

செய்யுமிவ் அருச்சனை சேர்ந்த துதியை
அம்மையே ஏற்று அருள்க அருள்கவே.
சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று
வாழ்க பல்லாண்டு வாழ்கஎன அருள்கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

## குமரகுருபர சுவாமிகள் அருளியது

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயரோ வியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்டகா டேந்துமிளமென்
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே!

பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தற்
பிடியே! வருக முழுஞானப்
பெருக்கே! வருக பிறமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே! வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
விளைவே! வருக பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த
கொம்பே! வருக திருக்கடைக்கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப்பெரும் பிணிக்கோர்
மருந்தே! வருக பசுங்குதலை
மழலைக் கிளியே! வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக வருகவே!

## சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழத் தீம்பா
லமுதங் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றேற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும்விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமியந்தாதி

## காப்பு

தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
யூரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் பொது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே.

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பணிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையி
லணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே.

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேனின் னன்பர் பெருமை யெண்ணாத கருமநெஞ்சான்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே.

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோ
னருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே.

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே.

ததியுறு மத்திற் கழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனு
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்றுந்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே.

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி விந்துர வண்ணத்தி னாண்மகி டன்றலைமே
லந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
சுந்தரி கைத்தலத் தாண்மலர்த் தாளென் கருத்தனவே.

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமு மாரமுஞ் செங்கைச் சிலையுமம்பு
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே.

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
னொன்று மரும்பொரு ளேயரு ளேயுமையே யிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாண்மறை நான்கினுக்குந்
தானந்த மான சரணார விந்தத் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிய துன்புகழ் கற்றதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே.

பூத்தவ னேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ னேபின் கரத்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ னேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே.

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்தார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே.

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரு
மொளியே யொளிரு மொளிக்கிடமே யெண்ணி லொன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தவம்மே
யளியே னறிவள விற்கள வான ததிசயமே.

அதிசய மான வடிவுடை யாளர விந்தமெல்லாந்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாகம பாகத்தை வவ்வியதே.

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு முங்க டிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
யவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநின்ற நின்றிரு மேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சுங்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானத் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
வொளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவனே.

உறைகின்ற நின்றிருக் கோயிலின் கேள்வ ரொருபக்கமோ
வறைகின்ற நான்மறை யின்னடி யோமுடி யோவமுத
நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ் சமோவென்ற னெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே.

மங்கலை செங்கலை சம்முலை யாண்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயி றாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே.

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
யடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே.

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளேய னைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே.

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
வணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கண் முயன்றுகொண் டேன்முதன் மூவருக்கு
மன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே
யென்னே யினியுன்னை யான்மற வாமனின் றேத்துவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏத்து மடியவ ரீரே ழுலகினை யும்படைத்துங்
காத்து மழித்துந் திரிபவ ராங்கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங் கேமண நாறுநின் றாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி யேறிய வாறு நகையுடைத்தே.

உடைந்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
அடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருட்புனலாற்
றுடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே.

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தா
ளல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே.

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சக்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே.

அன்றே தடுத்தென்னை யாண்டுகொண்டாய் கொண்டதல்ல வென்கை
நன்றே யுனக்கினி நானென் செயினு நடுக்கடலுட்
சென்றே விழினுங் கரையேற் றுகைநின் றிருவுளமே
யொன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே

உமையு முமையொரு பாகரு மேக வுருவில்வந்திங்
கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்
சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
அமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசையுமே.

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே.

*ப.தி. - 11*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க
வழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தர் சித்தமெல்லாங்
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுதுன்னை யேயன்னை யேயென்ப னோடிவந்தே

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகந்
தந்தே பரிவொடு தான்போ யிருக்குஞ் சதுர்முகமும்
பைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொற்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே

திங்கட் பசுவின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
வெங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேற்றுயில் கூரும் விழுப்பொருளே.

பொருளே பொருண்முடிக் கும்போக மேயரும் போகஞ்செய்யு
மருளே மருளில் வருந்தெரு ளேயென் மனத்துவஞ்சத்
திருளேது மின்றி யொளிவெளி யாகி யிருக்குமுன்ற
னருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே.

கைக்கே யணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே.

பவனக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவற்
றவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குத் துணைமுலையா
ளவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே.

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கள்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பொரு மாட்டியைப்பேதை நெஞ்சிற்
காணுதற் கண்ணிய ளல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய வெண்ணமன் றேமுன்செய் புண்ணியமே.

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தா
னண்ணியிங் கேவந்து தம்மடி யார்க ணடுவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே.

இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுகி யிளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டிறைவர் வலிய நெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே.

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின் சொற்
றிரிபுர சுந்தரி சிந்துர மேனிய ளுமைநெஞ்சிற்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
யெரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே

தவளே யிவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமா
மவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினா
லிவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாந்
துவளே னியொருதெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே.

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே.

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்தபொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநில
மேழும் பருவரை மெட்டுமெட் டாம லிரவுபகற்
சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

சுடருங் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சி
லிடருந் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னு மெய்துவரோ
குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே

குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்
தரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த விசைவடி வாய்நின்ற நாயகியே

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரண மரணமக்கே.

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர்தங்கண்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே

வையந் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
வையன் றிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே.

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேனித்தம் நீடுதவங்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலுஞ்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னா ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
யுன்னா தொழியினு முன்னினும் வேண்டுவதொன்றிலையே.

ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றா ளனைத்தையு நீங்கிநிற் பாளென்ற னெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவா
ரன்றா லிலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே.

ஐய னளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லா
முய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர்தம்பாற்
செய்ய பசுந்தமிழ்ப் பாமா லையுங் கொண்டு சென்றுபொய்யு
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே.

அருணாம் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்குந்
தருணாம் புயமுலைத் தையனல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமுங் காரம்புயமுஞ்
சரணாம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே.

தஞ்சம் பிறிதில்லை யீதல்ல தென்றுன் றவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைகின்றி லேனொற்றை நீள்சிலையு
மஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே.

பாலினுஞ் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினுந் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வாரச்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினுஞ் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயே னையுமிங் கொருபொரு ளாகநயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய் நின்னை யுள்ள வண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
றாயே மலைமகளே செங்கண் மாறிருத் தங்கைச்சியே.

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே.

தேறும் படிசில வேதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றிற் கொட்டுந் தறிகுறிக் குஞ்சமய
மாறுந் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறுஞ் சயமமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே.

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணே ணொருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணே னிருநில முந்திசை நான்குங் ககனமுமே.

ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கத்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன்றோ வல்லி நீ செய்த வல்லபமே.

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன் றிலேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த
சொல்லவ மாயினு நின்றிரு நாமங்க டோத்திரமே.

தோத்திரஞ் செய்து தொழுமின் போலுநின் றோற்றமொரு
மாத்திரைப் போது மனத்தில்வை யாதவர் வண்மைகுலங்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரும் புனலுங் கனலும்வெங் காலும் படர்விசும்பு
மூரும் முருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்
சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே.

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல்வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.

அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேஇரங் கேல்உனக்(கு) எனக்குறையே

என்குறை தீரநின்(று) ஏத்துகின் றேன்இனி யான்பிறக்கின்
நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழு(து) எமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்(கு)ஒளி செம்மையம்மை
நாமம் திருபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே.

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே.

குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரா(ன்) ஒருகூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலின் சூலி வராகிஎன்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தே(ன்)என் துணைவிழிக்கே.

விழிக்கே அருளுண்(டு) அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு)அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே

கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாஎண்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றதா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன் என(து) உன(து) என்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன் றிலேன்என்கண் நீவைத்த பேரளியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே.

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

தைவந்த நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல்அறி யாமடப் பூங்குயிலே.

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா கலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்(கு) அன்(று) இமவான் அளித்த கனங்குழையே.

குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில்எப் போதும் உதிக்கின்றவே

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம்எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கப்
காத்தாளை ஐங்கணை பாசாங் குசமும் கரும்பும்அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்(கு)ஒரு
தீங்கில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமியம்மை பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும்மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதசீர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

காரளக பந்தியும் பந்தியினன் அலங்கலும்
கரிய புருவச் சிலைகளும்
கர்ணகுண் டலமுமதி முகமண்டலம் நுதற்
கத்தூரிப் பொட்டு மிட்டுக்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழியுஞ் சிறிய
கொவ்வையின் கனிய தரமும்
குமிழனைய நாசியும் முத்தநிகர் தந்தமும்
கோடுசோ டான களமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரணிந் திருமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்று வாயே
ஆரமணி வானி லுறை தாரகைகள் போலநிறை
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதசீர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!

மகரவார் குழல்மேல் அடர்ந்துகுமிழ் மீதினில்
மறைந்து வாளைத் துறந்து
மைக்கயலை வேண்டிநின் செங்கமல விழியருள்
வரம்பெற்ற பேர்க ளன்றோ?
செகமுழு வொற்றைத் தனிக்குடை கவித்துமேற்
சிங்கா தனத்தி லுற்றுச்
செங்கோலும் மனுநீதி முறைமையும் பெற்றுமிகு
திகிரியுல காண்டு பின்பு
புகர்முகத் ஐராவதப் பாக ராகிநிரை
புத்தேளிர் வந்து போற்றிப்
போக தேவேந்திரன் எனப்புகழ விண்ணில்
புலோமிசை யொடுஞ்சு கிப்பர்
அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதசீர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிராமி யே!

மறிகடல்கள் ஏழையுந் திகிரிஇரு நான்கையும்
மாதிறல் கரியெட் டையும்
மாநாகம் ஆனதையும் மாமேரு என்பதையும்
மாகூர்மம் ஆனதையு மோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறியரவு தாங்கிவரு புவனமீ ரேழையும்
புத்தேனீர் கூட்டத் தையும்
பூமகளை யுந்திகிரி மாயவனை யும்அரையுற்
புலியாடை உடையா னையும்
முறைமுறைக ளாயீன்ற முதியவர்களாய்ப் பழைமை
முறைகள் தெரியாத நின்னை
மூவுலகி லுள்ளவர்கள் வாலையென்(று) அறியாமல்
மொழிகின்ற தேது சொல்வாய்
அறிவுநிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதசீர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர
அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியிலே நின்ன தன் பெனுஞ் சிறகால்
வருந் தாம யலணைத்துக்
கோடாமல் வளர்சிற் றெறும் புமுதல் குஞ்சரக்
கூட்டமுத லான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
குறையாம லேகொடுத்து
நீடாழி யுலகங்கள் யாவையும் நேயமாய்
நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலி அகிலங்களுக்(கு) அன்னை என்றோதும்
நீலியமன்(று) ஓது வாரோ?
ஆடாத நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதசீர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்குஞ் சரத்தொட் டெறும்புகடை யானதொரு
பல்லுயிர்க் குங்கல் விடைப்
பட்டதே ரைக்கும்அன் றுற்பவித் திடுகருப்
பையறு சீவனுக்கும்
மல்குஞ் சராசரப் பொருளுக்கும் இமையாத
வானவர் குழாத்தி னுக்கும்
மற்றுமொரு மூவர்க்கு மியாவர்க்கும் அவரவர்
மனச்சலிப் பில்லா மலே
நல்குத் தொழிற்பெருமை உண்டா யிருந்துமிகு
நவநிதி உனக்கி ருந்தும்
நானொருவன் வறுமையிற் சிறியனா னால்அந்
நகைப்புனக் கேஅல்ல வோ?
அல்கலந் தும்பர்நா டளவெடுக் குஞ்சோலை
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதசீர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

நீடுல கங்களுக்(கு) ஆதரவாய் நின்று
நித்தமாய் முத்தி வடிவாய்
நியமமுடன் முப்பத் திரண்டறம் வளர்க்கின்ற
நீமனை வியாய்இ ருந்தும்
வீடுவீ டுகடோறும் ஓடிப் புகுந்துகால்
வேசற்(று) இலச்சை யும்போய்
வெண்டுகில் அரைக்கணிய விதியற்று நிர்வாண
வேடமுங் கொண்டு கைக்கோர்
ஓடேந்தி நாடெங்கும் உள்ளத் தளர்ந்துநின்(று)
உன்மத்த னாகி அம்மா!
உன்கணவன் எங்கெங்கும் ஐயம்புகுந் தேங்கி
உழல்கின்ற தேது சொல்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுகொடி மாடமிசை மாதர்விளை யாடிவரும்
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

ஞானந் தழைத்துன் சொரூபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தி னிற்போய்
நடுவி னிலிருந்துவந் தடிமையும் பூண்டவர்
நவிற்றும் உபதேச முட்கொண்டு
ஈனந்தனைத் தள்ளி எனதுநா னெனுமானம்
இல்லா மலேது ரத்தி
இந்திரிய வாயில்களை இறுகப்பு தைத்து
இருளற விளக்கேற் றியே
ஆனந்த மானவிழி அன்னமே! உன்னைஎன்
அகத்தா மரைப்போ திலே
வைத்துவே றேகலை யற்றுமே லுற்றபர
வசமாகி அழியாத தோர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்ற தென்றுகாண்
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!

சலமியுல கத்திற் சராசரங் களையீன்ற
தாயா கினாலெ னக்குத்
தாயல்ல வோ? யான்உன் மைந்த னன்றோ? எனது
சஞ்சலம் தீர்த்து நின்றன்
முலைசுரந் தொழுகுபா லூட்டிஎன் முகத்தைஉன்
முன்தானை யால்து டைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகின்ற மழலைக் குகந்துகொண் டிளநிலா
முறுவல்இன் புற்றரு கில்யான்
குலவிளையாடல் கொண்டருண் மழைபொழிந்(து) அங்கை
கொட்டி வாவென்(று) அழைத்துக்
குஞ்சரமு கன்கந்தனுக்(கு) இளையன் என்றெனைக்
கூறினால் ஈனம் உண்டோ?
அலைகடலி லேதோன்று மாறாத அமுதமே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிராமி யே!

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னில்
கணப்போதும் அர்ச்சிக் கிலேன்
கண்போதி னாலுன் முகப்போது தன்னையான்
கண்டுதரிசனை புரிகிலேன்
முப்போதில் ஒருபோதும் என்மனப் போதிலே
முன்னிஉன் ஆல யத்தின்
முன்போது வார்தமது பின்போத நினைகிலேன்
மோசமே போய்உ ழன்றேன்
மைப்போத கத்திற்கு நிகரெனப் போதெரு
மைக்கடா மீதேறி யே
மாகோர காலன் வரும்போது தமியேன்
மனங்கலங் கித்தி யங்கும்
அப்போது வந்துன் அருட்போது தந்தருள்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிராமி யே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ துர்க்கைச் சித்தர் அவர்கள் இயற்றிய

## ராகுகால துர்க்கா அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உலகை யீன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

செம்மை யானவள் துர்க்கா செபமு மானவள்
அம்மை யானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மை யானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உயிரு மானவள் துர்க்கா உடலு மானவள்
உலக மானவள் எந்தன் உடைமை யானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்வவள்
துறையு மானவள் இன்பத் தோணியானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நம்மை தாங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே.

குருவு மானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் திருசூலி யானவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே.

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

கன்னி துர்க்கையே இதயக் கமலத் துர்க்கையே
கருணைத் துர்க்கையே வீரக் கனத் துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்புத் துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்கா ஸ்தோத்திரம்

ஜெயஜெய தேவி ஜெயஜெய தேவி துர்க்காதேவி சரணம்
ஜெயஜெய தேவி ஜெயஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
துர்க்கையம்மனை துதித்தால் என்றும் துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயாம் அவளை தரிசனம் கண்டால் போதும்
கர்ம வினைகளும் போகும் சர்வமங்களம் கூடும்.
(ஜெயஜெய தேவி)

பொற்கரங்கள் பதினெட்டும் நம்மை சுற்றிவரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்குமப் பொட்டு வெற்றிப் பாதையைக் காட்டும்
ஆயிரம் கரங்கள் உடையவளே ஆதிசக்தி அவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே தாய் போல் நம்மைக் காப்பவளே
(ஜெயஜெய தேவி)

சங்கு சக்கரமும் வில்லும் அம்பும் மின்னும் வாளும் வேலும் சூலமும்
தங்க கைகளில் தாங்கி நிற்பாள் - அம்மா தாயே
சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள் திங்களை முடிமேல் சூடிநிற்பாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள் மங்கையர்க்கரசியும்
அவளே அங்கையர்க்கண்ணியும் அவளே

ஜெயஜெய தேவி ஜெயஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
ஜெயஜெய தேவி ஜெயஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
கனக துர்க்கா தேவி சரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாராதனை பாட்டு

தீபாராதனையில் உந்தன் திருமுகம் விளங்குதம்மா
தினம் தினம் உனையே தொழுபவர்க்கெல்லாம்
திருவருள் பெருகுதம்மா அம்மா
திருவருள் பெருகுதம்மா *(தீபாராதனை)*
பாலும் பழமும் பன்னீரும் பஞ்சாமிர்தமாய் அபிஷேகம் (2)
பார்த்தவர் நெஞ்சம் பரவசமாகும் (2)
பலவித நன்மைகள் கூடிவரும் *(தீபாராதனை)*
உந்தன் ஆலய வாசலிலே! இங்கு
வாத்திய ஒலியும் கேட்குதம்மா
ராகு காலமது வந்ததம்மா-உன்னைப்
பாடி பணிவோம் நாங்களம்மா *(தீபாராதனை)*
மஞ்சள் அலங்காரம் இங்கு
பக்தர்கள் அனைவரை கவருதம்மா
துர்க்கையம்மா உன்னை வேண்டிக்கொண்டாலே
காரியம் யாவையும் சித்தி செய்வாயே! *(தீபாராதனை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகப்பெருமான் வழிபாடு

## முருகன் அர்ச்சனை

### (108 போற்றி)

1. ஓம் அகத்தியருக்கு அருளினோய் போற்றி
2. ஓம் அமரரைக் காத்தாய் போற்றி
3. ஓம் அருணகிரிக்கு அருள்வோய் போற்றி
4. ஓம் அழகர் மலையோய் போற்றி
5. ஓம் ஆறுமுகன் ஆனவனே போற்றி
6. ஓம் ஆண்டிக் கோலமே போற்றி
7. ஓம் ஆறுபடை வீடுடையாய் போற்றி
8. ஓம் ஆறெழுத்து மந்திரம் போற்றி
9. ஓம் இடும்பனை ஏற்றாய் போற்றி
10. ஓம் இளங்குமர ஏந்தலே போற்றி
11. ஓம் உலகை வலம் வந்தாய் போற்றி
12. ஓம் உருகும் அடியார் உளமே போற்றி
13. ஓம் எட்டிக்குடி அழகா போற்றி
14. ஓம் எண் கண் இறைவா போற்றி
15. ஓம் என்றும் இளையாய் போற்றி
16. ஓம் ஏரகத்து அரசே போற்றி
17. ஓம் ஐங்கரன் தம்பியே போற்றி
18. ஓம் ஓங்காரப் பொருளே போற்றி
19. ஓம் ஔவைக்கு அருளினாய் போற்றி
20. ஓம் கதிர்காம அருவமே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. ஓம் கந்த சுவாமியே போற்றி
22. ஓம் கந்தகிரிக் கடம்பே போற்றி
23. ஓம் கந்தகோட்டக் கடவுளே போற்றி
24. ஓம் களிற்றூர்திப் பெருமானே போற்றி
25. ஓம் கழுகுமலைக் கந்தா போற்றி
26. ஓம் கன்னித்தமிழ் முருகா போற்றி
27. ஓம் கார்த்திகேயன் கருணையே போற்றி
28. ஓம் காவடிப் பிரியோய் போற்றி
29. ஓம் கிரவுஞ்ச பேதனா போற்றி
30. ஓம் குடந்தைக் குமரா போற்றி
31. ஓம் குமாரக் கடவுளே போற்றி
32. ஓம் குறிஞ்சித் தலைவா போற்றி
33. ஓம் குழந்தை வேலனே போற்றி
34. ஓம் குன்றக் குடியாய் போற்றி
35. ஓம் குன்றுதோறாடும் குமரனே போற்றி
36. ஓம் கூடற் குமரா போற்றி
37. ஓம் கொடுங்குன்றுக் கோமானே போற்றி
38. ஓம் கொடுமளூர்ப் பூமானே போற்றி
39. ஓம் கொல்லிமலை வேடனே போற்றி
40. ஓம் கோவணப் பண்டாரமே போற்றி
41. ஓம் கௌமாரத் தலைவா போற்றி
42. ஓம் ஞான சக்திதரனே போற்றி
43. ஓம் ஞான தண்டாயுதபாணியே போற்றி
44. ஓம் சக்திவேல் பெற்றாய் போற்றி
45. ஓம் சங்கத் தலைவா போற்றி
46. ஓம் சடாட்சர மந்திரமே போற்றி
47. ஓம் சரவண பவனே போற்றி
48. ஓம் சண்முகத்து அரசே போற்றி
49. ஓம் சதாசிவ மைந்தா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. ஓம் சஷ்டி விரதமே போற்றி
51. ஓம் சிங்கமுகனை வென்றாய் போற்றி
52. ஓம் சிங்கார வேலனே போற்றி
53. ஓம் சிகி வாகனா போற்றி
54. ஓம் சிவகிரிச் செல்வா போற்றி
55. ஓம் சுப்பிர மணியாய் போற்றி
56. ஓம் சூரனை வென்றோய் போற்றி
57. ஓம் சென்னிமலைச் செல்வா போற்றி
58. ஓம் சேவற் கொடியாய் போற்றி
59. ஓம் சேனாதிபதிச் செவ்வேளே போற்றி
60. ஓம் சைவக் கொழுந்தே போற்றி
61. ஓம் தார காந்தகா போற்றி
62. ஓம் திருச்செந்தூர் வாழ்வே போற்றி
63. ஓம் திருப்பரங் குன்றோய் போற்றி
64. ஓம் திருப்புகழ் பெற்றோய் போற்றி
65. ஓம் திருப்போரூத் தேவா போற்றி
66. ஓம் திருமாலின் மருகா போற்றி
67. ஓம் திருத்தணி முருகா போற்றி
68. ஓம் திருவருள் தருவாய் போற்றி
69. ஓம் திருவிடைக்கழித் தலைவா போற்றி
70. ஓம் திருவினும் திருவே போற்றி
71. ஓம் தித்திக்கும் உருவே போற்றி
72. ஓம் திவ்விய ரூபனே போற்றி
73. ஓம் தேனாற்றுக் குரிசிலே போற்றி
74. ஓம் தேவ சேனாபதியே போற்றி
75. ஓம் தேவயானை கணவா போற்றி
76. ஓம் தேவாதி தேவனே போற்றி
77. ஓம் நக்கீரனைக் காத்தாய் போற்றி
78. ஓம் நந்தா விளக்கே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

79. ஓம் நவவீர நாயகனே போற்றி
80. ஓம் பராசக்தி பாலனே போற்றி
81. ஓம் பழநிமலை வேலனே போற்றி
82. ஓம் பழமுதிர் சோலையாய் போற்றி
83. ஓம் பன்னிரு கரத்தோய் போற்றி
84. ஓம் பாலசுப்பிரமணியா போற்றி
85. ஓம் பிரம்மனைக் குட்டினோய் போற்றி
86. ஓம் பிரம்ம சாத்தனே போற்றி
87. ஓம் பொன்னார் திருவடியே போற்றி
88. ஓம் மயிலேறும் மாணிக்கமே போற்றி
89. ஓம் மயிலம் மலையரசே போற்றி
90. ஓம் மயூரகிரிக் கோவே போற்றி
91. ஓம் மலையேறும் வள்ளலே போற்றி
92. ஓம் மலையைப் பிளந்தோய் போற்றி
93. ஓம் மனதைக் கவர்ந்தோய் போற்றி
94. ஓம் முருகெனும் அழகே போற்றி
95. ஓம் முத்தைய ரத்தினமே போற்றி
96. ஓம் வடிவேலைப் பெற்றோய் போற்றி
97. ஓம் வள்ளி மணாளனே போற்றி
98. ஓம் வள்ளிமலை வள்ளலே போற்றி
99. ஓம் வயலூரின் வாழ்வே போற்றி
100. ஓம் விசாகத்து ஒளியே போற்றி
102. ஓம் விருத்தனாய் நின்றாய் போற்றி
103. ஓம் வீரபாகு சோதரா போற்றி
104. ஓம் வேடனாய் வந்தாய் போற்றி
105. ஓம் வேத மந்திரமே போற்றி
106. ஓம் வேதனை வென்றாய் போற்றி
107. ஓம் வையாபுரிக் கரசே போற்றி
108. ஓம் ஜெகஜோதிப் பெருமாளே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகன் அருட்பாடல்கள்

அரசே! யமுதே யருளா மாதா பராசரணம்
சரசே யவனே சரணம் பதுமாசனனே சரணம்
சுரசே கரனே சரணந் துகள்போழ் குமரா சிவசங்
கரசே தனனே யெனையாள் கருணாகரனே சரணம்

சரநாயகனே மரணஞ்சன்னங்காணாய் சரணம்
வர நாயகனே சரணம் பொள்ளாமணியே சரணம் செருவேற்
கர நாயகனே பாவக்க ழுவாயறியா வெனையாள்
பர நாயகனே சரணம் படையார்பதியோர் பதியே சரணம்

பதியே சரணம் வயிரப்படையாய் சரணம் கருணா
நிதியே சரணஞ் சுடர் சானெடுவேலிறையே வினைசூல்
மதியே மதியா தவர்பான் மருவாமழவே சரணம்
கதியேதுமிலா வெனையால் கலைநாயகனே சரணம்

கலைவேத முணர்ந்தருளே கருதும் பெரியாரடைமா
நிலைவேத முணர்ந்திடவே நினையன்பரனே சரணம்
சிலை வேலுடை வஞ்சகரின் றிறல்யாவையு நூறிடுமார்
இலை வேலுடையா யழியா விருவானடையாய் சரணம்.

வானா ரறிவே சரணம் வாடாமலரே மனமே
ஆனா வழகேயமரா தவிர்நீ பகமேயமுதே
ஊனா ருதரம் புகுதாவுயர்வைக் கருதென் குருவே
தேனா டருந்தெனாயுள் சிகியூர் தேவே சரணம்

தேவே பதினெழ் வருடஞ் செலுமென்றி தன்முன்பொரு நாள்
நாவேயசையா வொலியா நவில்கட்டுரை நாள்சிலவே
பூவே கழியுங் காறும் புலவாருடலைப் பிரியா
யோவேலிறையே யெனையாளுயிர் நாயகனே சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரே தமெலா மழிமாறுபதேக வரந்தருவோய்
செயிரேதுமிலா வரனே சரணந்தவமென்
பயிரே வளரும்படியே பாயும்புனலே சுவைசால்
அயிரே யெனையாளதுலா வயிலா மயிலா சரணம்

மயிலொத் தமடச் சூர்மா மகளுக்கினியோ யெனையாள்
வெளிலொத் தவொளிப் பலபூண் மின்னும் படிபன்னடனம்
மயிலொப் பிலியே யெலியூர் பரனார் துணைவாபதிநூல்
குயிலொட்ப மகாமுனியெ குகனெ சரணஞ் சரணம்

குகனே குகனே யெனவே குளினாவுறை வோயறுமா
முகனே சரணங் குழைபூண் முருகா சரணஞ் சரணம்
பெருவானெனவே நாளும் பின்றாவருளா லெனையாள்
ஒருவா னவனேயுன் சீருறுநர்க்குல கம்பரமே

- குமரவேள் பதிற்றுப் பத்து

காலமாய்க் காலம் இன்றிக்
கருமமாய்க் கருமம் இன்றிக்
கோலமாய்க் கோலமாம் இன்றி
குணங்களாய்க் குணங்கள் இன்றி
ஞாலமாய் ஞாலம் இன்றி
அநாதியாய் நங்கட்கெல்லாம்
மூலமாய் இருந்த வள்ளல்
மூவிருமுகங் கொண்டுற்றான்

ஆறிரு தடந்தோள் வாழ்க!
அறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க!
குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க!
யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க!
வாழ்கசீர் அடியாரெல்லாம்

- கந்தபுராணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம் கொண்ட உமைமுலைப்பால்
மணம் கொண்ட செவ்வாயும்
பரம் கொண்ட களிமயிலும்
பனிரண்டு கண் மலரும்
சிரம்கொண்ட மறை இறைஞ்சும்
சேவடியும் செந்தூரன்
கரம் கொண்ட வேலும், எந்தன்
கண்ணை விட்டு நீங்காவே!

- செந்நிற் கலம்பகம்

உருவாய், அருவாய், உளதாய், இலதாய்
மருவாய், மலராய், மணியாய், ஒளியாய்
கருவாய், உயிராய், கதியாய், விதியாய்
குருவாய், வருவாய், அருள்வாய், குகனே!

- கந்தர் அநுபூதி

காதிமோதி வாதாடு நூல் சுற்றிடுவோருங்
காசுதேடி யீயாமல் வாழப் பெறுவோரும்
மாறுபாகர் வாழ்வே யெனா நெக்குருகாறும்
மாறிலாத மாகாலனூர் புக்கலைவாரே
நாதரூப மாநாதராகத் துறைவோனே
நாகலோக மீரேழுபாடுக் குரியோனே
தீதிலாத வேல் வீரசேவற் கொடியோனே
தேவதேவ தேவாதி தேவப் பெருமானே

- அருணகிரிநாதர்

கோழிக் கொடியனடி பணியாமல் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலிகாள், உங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்கள் அத்தமெல்லாம்
ஆழப் புதைத்து வைத்தால் வருமோநும் மடிப்பிறகே

- கந்தரலங்காரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு தின்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இரு தொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலிமுழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரம்மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என் இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடி இணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்னகை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல்துணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரன்று புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டு உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டல்
நில்லாது ஓட நீஎனக்கு அருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்து உறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்நா இருக்க யான் உனைப் பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவள் ஆமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீதுன் மனம்மகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன் ஒரு நினைவது ஆகி
கந்தர் சஷ்டி கவசமும் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்து ஆறுருக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அட்ட திக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்து அடி
அறிந்து எனதுள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்து உணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தரலங்காரம்

## காப்பு

அடலருணைத்திருக் கோபுரத் தேயந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையிற்
தடபடெ னப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே

## நூல்

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைபிர பஞ்சமென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்ட வாசெஞ் சடாடவிமே
லாற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன்கிரு பாகரனே

அழித்துப் பிறக்கவொட் டாவயில் வேலன் கவியையன்பா
லெழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே

தேரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடக நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே.

ஓரவொட் டாரொன்றை யுன்னவொட் டார்மல ரிட்டுனதாள்
சேரவொட் டாரைவர் செய்வதென் யான்சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே

பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி னால்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தம் தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே

சளத்திற் பிணிபட்ட சட்டுக் கிரியைக்குட் டவிக்குமென்றன்
உளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பா யவுண ருரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்துவெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட வேல்தொட்ட காவலனே.

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததொ ரானந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுக மாறுடைத் தேசிகனே.

தேனென்று பாகென் றுவமிக்கொ ணாமொழித் தெய்வவள்ளி
கோனன் றெனக்கு பதேசித்த தொன்றுண்டு கூறுவற்றே
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே

சொல்லுகைக் கில்லையென் றெல்லா மிழந்துசும் மாவிருக்கு
மெல்லையுட் செல்ல வெனைவிட்ட வாவிகல் வேலனல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக் கல்வரைக் கொவ்வைச்-செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தோளண்ணல் வல்லபமே.

குசைநெகி ழாவெற்றி வேலோனவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு வடியிடவெண்
திசைவரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்ப்பட்டதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகையென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துடுபடல
மிடைபட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே

ஒருவரைப் பங்கி னுடையாள் குமார னுடைமணிசேர்
திருவரைக் கிங்கிணி யோசை படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சினை யீடேற்று வாயிரு நான்கு வெற்பு
மப்பாதி யாய்விழ மேருங் குலுங்கவிண் ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே

தாவடி போட்டு மயிலிலுந் தேவர் தலையிலுமென்
பாவடி யேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடு முட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே

தடுங்கோண் மனத்தை விடுங்கோள்வெகுளியைத் தானமென்று
மிடுங்கோ ளிருந்த படியிருங் கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் துளைக்கவைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே

வேதா கமசித்ர வேலா யுதன்வெட்சி பூத்தண்டைப்
பாதார விந்த மரணாக அல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மேதெரி யாதொரு பூதர்க்குமே

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ளுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க உதவாவுடம்பின் வெறு நிழல்போற்
கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் துளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந்தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே

கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்க ளத்தமெல்லா
மாழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே

மரணப்ர மாத மெமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிங் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மாங்கல்ய தந்துரஷா
பரணக்கிரு பாகர ஞானா கரசுர பாஸ்கரனே.

மொய்தர ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான் றலைபத்துங் கத்தரிக்க
வெய்தான் மருக னுமையாள் பயந்த விலஞ்சியமே.

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவனேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவேந்து காத்தருளே

கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச் சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண முயன்றவனே

தண்டா யுதமுந் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாவந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலச் சிகண்டி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப் பார் வெறுங் கர்மிகளே

ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாடலொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்கு மேகந்த வேண்மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்தசெச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே

வேலே விளக்குகை யான்செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லான்மன வாக்குச் செய
லாலே யடைதற் கரிதா யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளையெவ் வாறுபுகல்வதுவே

கடத்திற் குறத்தி பிரானரு ளாற்கலங் காதசித்தத்
திடத்திற் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்
படத்திற் கழுத்திற் பழுத்தசெவ் வாயிற் பணையிலுந்தித்
தடத்திற் தனத்திற் கிடக்கும் வெங்காம சமுத்திரமே

பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற நீசெந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற் றமயூர மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங னேமுத்தி காண்பதுவே

பொக்கக் குடிலிற் புகுதா வகைபுண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட் டுதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரியுரு வக்கதிர் வேறொட்ட காவலனே

கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
துளைத்துப் புறப்பட்ட வேற்கந்த னேதுறந் தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்குங் - கண்ணார்க்
கிளைத்துத் தவிக்கின்ற வென்னையெந் நாள்வந் திரட்சிப் பையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமா ளவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மான்திரு நாமம் புகல்பவரே

பொட்டாக வெற்றைப் பொருதகந் தாதப்பிப் போனதொன்றற்
கெட்டாத ஞான கலைதரு வயிருங் காமவிடாய்ப்
பட்டா ருயிரைத் திருகிப் பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக் கேமனங் கட்டுண்டதே

பத்தித் துறையிழிந் தாநந்த வாரி படிவதினால்
புத்தித் தரங்கந் தெளிவதென் றோபொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா வதிகொண்ட கொற்றவனே

சுழித்தோடு மாற்றிற் பெருக்காக னதுசெல்வந் துன்பமின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே

கட்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேல்மற வேன்முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டூடூ டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக் கொட்டி யாடுவெஞ் சூர்க்கொன்ற ராவுத்தனே

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே

உதித்தாங் குழல்வதுஞ் சாவதுந் தீர்த்தெனை யுன்னிலொன்றா
விதிதாண் டருடருங் காலமண் டோவெற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான் றிருமரு காமயி லேறிய மாணிக்கமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழி றேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தன வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே

பாலேயனையமொழியர்த மின்பத்தைப் பற்றியென்றும்
மாலேகொண் டுய்யும் வகையறி யேன்மலர்த் தாடருவாய்
காலே மிகவுண்டு காலே யிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளு மாலோன் மருகசெவ் வேலவனே

நிணங்காட்டுங் கொட்டிலை விட்டொரு வீடெய்தி நிற்கநிற்குங்
குணங்காட்டி யாண்ட குருதே சிகனங் குறச்சிறுமான்
பணங்காட்டு மல்குற் குருகுங் குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந் தெங்கே யெனக்கிங்ஙன் வாய்த்ததுவே

கவியாற் கடலடைத் தோன்மரு கோனைக் கணபணக்கட்
செவியாற் பணியணி கோமான் மகனைத் திறலரக்கர்
புவியாற் பெழத்தொட்ட போர்வேன்முருகனைப் போற்றியன்பாற்
குவியாக் கரங்கள்வந் தெங்கே யெனக்கிங்ஙன் கூடியவே

தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கை நாற்றிநரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு வேய்ந்த வகம்பிரிந்தால்
வேலாற் கிரிதுளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே

ஒருபூ தருமறி யாத்தனி வீட்டி லுரையுணர்வற்
றிருபூத வீட்டி லிராமலென் றானிரு கோட்டொருகைப்
பொருபூ தரமுரித் தேகாச மிட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவ னிட்டூர சூர குலாந்தகனே

நீயான ஞான வினோதந் தனையென்று நீ யருள்வாய்
சேயான வேற்கந்த னேசெந்தி லாய்சித்ர மாதரல்குற்
றேயாவுருகிப் பருகிப் பெருகித் துவளுமிந்த
மாயா விநோத மனோதுக்க மானது மாய்வதற்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண்டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே

புத்தியை வாங்கிநின்பாதாம் புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க வறிகின்றி லேன் முது சூர் நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினையேற்கென் குறித்தனையே

சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் றொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண்தண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற நிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே

படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூர னடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே

மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே

சிகராத்ரி கூறிட்ட வேலுஞ்செஞ் சேவலுஞ் செந்தமிழாற்
பகரார்வ மீபணி பாசங் க்ராமபணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி துரங்க நிருபகுமரா
குகராட் சசபட்ச விட்சோப தீர குணதுங்கனே

வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினாற்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தாற்
தேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்குமாய்ப்பவரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனை விதித் தாயிலை யேயிலங் காபுரிக்குப்
போகைக்கு நீ வழி காட்டென்று போய்க்கட றீக்கொழுத
வாகைச் சிலைவளைத் தான்மரு காமயில் வாகனனே

ஆங்காரமு மடங் காரொடுங் கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென் செய் வார்யம தூதருக்கே

கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நகரக்
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவ னூர்க்குச் செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே

பொருபிடியுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றி நித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண் டிருவினை யோமிறத்தால்
ஒருபிடி சாம்பருஞ் காணாது மாய வுடம்பிதுவே

நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற் கினிய பிரானிக்கு முல்லையுடன்
பற்றாக்கை யும்வெந்து சங்ராம வேளும் படவிழியாற்
செற்றார்க் கினியவன் தேவேந்த்ர லோக சிகாமணியே

பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
வெங்காயினும்வரு மேற்பவர்க் கிட்ட திடாமல்வைத்த
வங்கார ரமுமுங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்கார மோகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தரநு பூதி

## காப்பு

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

## நூல்

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனு நீ யலையோ
எல்லாமற என்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே.

வளைபட்டகைம் மாதொடு மக்க ளெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகமாறு மொழிந்து மொழிந் திலனே
அகமாடை மடந்தைய ரென் றயருஞ்
சகமாயையுள் நின்று தயங் குவதே.

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந்த மரும்பு மதோ
பணியா வென வள்ளி பதம் பணியுந்
தணியா வதிமோக தயா பரனே.

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பொரு தானவ நாசகனே.

மட்டூர்குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டூசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டூ டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப் பயனே.

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகாசல வேலவ நாலு கவித்
தியாகா சுரலோக சிகா மணியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொரு ளொன்று மறிந்திலனே.

முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே.

கைவாய் கதிர்வேல் முருகன் சுழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழி நாசியொடுஞ் செவியாம்
ஐவாய் வழி செல்லு மவாவினையே.

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங்கவ எண்குண பஞ் சரனே.

பேராசை யெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோக துரந் தரனே.

யாமோதிய கல்வியு மெம் மறிவுந்
தாமே பெற வேலவர் தந்ததனாற்
பூமேல் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீ ரினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
பதிகா வலசூர பயங் கரனே.

வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென்றொரு பாவி வெளிப் படினே.

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதேச முணர்த் தியவா
விரிதாரண விக்ரம வேளி மையோர்
புரிதா ரக நாக புரந்தரனே.

கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா கரசூர விபாட ணனே.

காளைக் குமரேச னெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச் சுரபூபதி மேரு வையே.

அடியைக் குறியா தறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே.

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வே னருள் சேரவு மெண்ணுமதோ
சூர்வே ரொடு குன்று தொளைத்தநெடும்
போர்வேல புரந்தர பூப தியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ அடியே னலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றிய சேவகனே.

ஆதார மிலே னருளைப் பெறவே
நீதா னொரு சற்று நினைந்திலையே
வேதாகம ஞான விநோ தமனோ
தீதா சுரலோக சிகா மணியே.

மின்னே நிகர்வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயி லேறிய வானவனே.

ஆனா அமுதே அயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகிய வென்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே.

இல்லே யெனுமா யையி லிட்டனைநீ
பொல்லே னறியாமை பொறுத் திலையே
மல்லே புரி பன்னிரு வாகுவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே.

செல்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே.

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரி வேடர்குலப் பிடிதோய்
மலையே மலை கூறிடு வாகையனே.

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென்று விடப் பெறுவேன்
மந்தா கினிதந்த வரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே.

சிங்கார மடந்தையார் தீநெறி போய்
மங்காம லெனக்கு வரந் தருவாய்
சங்க்ராம சிகா வலசண் முகனே
கங்கா நதி பால க்ருபாகரனே.

விதிகாணு முடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழ லென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே.

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே.

கிரிவாய் விடுவிக் ரம 'வேலிறையோன்'
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோடு மகந் தையையே.

ஆதாளியை யொன் றறியே னையறத்
தீதாளியை யாண் டதுசெப் புமதோ
கூதாள கிராத குலிக் கிறைவா
வேதாள கணம் புகழ்வே லவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவேடணை யென்று முடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவ சங்கர தேசிகனே.

வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோடு பசுந்
தினையோ டிதணோடு திரிந் தவனே.

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே.

குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையு மற்றதுவே.

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந் ததுவே.

சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே.

கரவா கியகல்வி யுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோக தயா பரனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தாயுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

ஆறா றையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே.

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென்றவ ரோடுறும் வேலவனே.

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையும் க்ருபைசூழ் சுடரே.

மதிகெட்டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திர ஞான சுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தன் பாமாலை

## திரு அருட்பிரகாச வள்ளலார் அருளியது.

திருச்சிற்றம்பலம்

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகலவாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

உளம் எனது வசம்நின்ற தில்லையென் தொல்லைவினை
ஒல்லைவிட் டிடவுமில்லை
உன்பதத் தன்பில்லை யென்றனுக் குற்றதுணை
உனையன்றி வேறுமில்லை
இளையனவ னுக்கருள வேண்டுமென் றுன்பால்
இசைக்கின்ற பேருமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழையவ னுக்கருள்வ தேனென்றும் எதிர்நின்று
 இயம்புகின் பேருமில்லை
வளமருவும் உனதுதிரு வருள்குறைவ தில்லைமேல்
 மற்றொரு வழக்குமில்லை
வந்திரப் போர்களுக் கிலையென்ப தில்லைநீ
 வன்மனத் தவனும் அல்லை
தளர்விலாச் சென்னையிற் கந்தகோட்டத்துள்வளர்
 தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
 சண்முகத் தெய்வமணியே.

நான்கொண்ட விரதம்நின் அடியலாற் பிறர்தம்மை
 நாடாமை யாகுமிந்த
நல்விரத மாங்கனியை யின்மையெனு மொருதுட்ட
 நாய்வந்து கல்வியந்தோ!
தான்கொண்டு போவதினி யென்செய்வென்! என்செய்வேன்!
 தளராமை யென்னு மொருகைத்
தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனென்
 தன்மூகம் பார்த்தருளுவாய்
வான்கொண்ட தெள்ளமுத வாரியே! மிகுகருணை!
 மழையே! மழைக்கொண்டலே!
வள்ளலே! என்னிருகண் மணியே! யென் இன்பமே!
 மயிலேறு மாணிக்கமே!
தான்கொண்ட சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
 தலமோங்கு கந்தவேளே!
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
 சண்முகத் தெய்வமணியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருணகிரிநாதர் அருளிய

# திருப்புகழ்

**தனதானத் தனதான தனதானத் தனதான**

இறவாமற் பிறவாமல் - எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான - பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே - குகனேசொற் குமரேசா
அறநாலைப் புகல்வோனே - அவிநாசிப் பெருமாளே.

**தத்தன தனதன தத்தன தனதன**
**தத்தன தனதன தனதான**

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்

மத்துமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே

முத்தமிழ் அடைவினை முற்படு கிரி தனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இயமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தந்த தனன தனனா தனனதன தனதான**

தொந்தி சரிய மயிரே வெளிறநிரை
தந்த மசைய முதுகே வளையஇதழ்
தொங்க ஒருகை தடிமேல் வரமகளிர் நகையாடித்
தொண்டு கிழவ னிவனா ரெனஇருமல்
கிண்கி ணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி

வந்த பிணியு மதிலே மிடையுமொரு
பண்டி தனுமெ யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுக துயர்மேவி
மங்கை யழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே ஒழுகவுயிர்
மங்கு பொழுது கடிதேமயிலின்மிசை வரவேணும்

எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே யினிவருக
என்கண் வருக என தா யிருர்வருக அபிராம
இங்கு வருக அரசே வருகமுலை
உண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல வருமாயன்

சிந்தை மகிழு முருகா குறவரிள
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா
திங்க ளரவு நதிசூ டியபரமர்
தந்த குமர அலையே கரைபொருத
செந்தி னகரி லினிதே மருவிவளர் பெருமாளே.

**தான தந்தன தானான தானன தனதான**

நாத விந்துக லாதீந மோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித சாமீந மோதம வெகுகோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம சம்புகு மாராந மோநம
போக அந்தரி பாலாந மோநம
நாக பந்தம யூரா நமோ நம பரசூரர்

சேத தண்டவி நோதாந மோநம
கீத கிண்கிணி பாதாந மோநம
தீர சம்ப்ரம வீராந மோநம கிரிராஜ
தீப மங்கள சோதீந மோநம
தூய அம்பல லீலாந மோநம
தேவ குஞ்சரி பாகாந மோநம அருள்தாராய்

ஈத லும்பல கோலால பூசையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதேம னோகர
ராச கெம்பரி நாடாளு நாயக வயலூரா

ஆதரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடேமு னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறிய மாகயி லையிலேகி
ஆதி யந்தவு லாவரசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
ஆவினன் குடிவாழ்வான தேவர்கள் பெருமாளே.

**தனனதன தான தந்த தனன தன தான தந்த**

**தனனதன தானதந்த தனதான**

கருவினுரு வாகி வந்து வயதளவிலேவ ளர்ந்து
கலைகள் பல வேதெரிந்து மதனாலே
கரியகுழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்பு தைந்து
கவலைபெரி தாகி நொந்து மிகவாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரகரசி வாயவென்று தினமுநினை யாமல் நின்று
அறுசமய நீதி யொன்றும் அறியாமல்
அசனமிடு வார்கள் தங்கள் மனைகள் தலை வாசல் நின்று
அனுதினமு நாண மின்றி அழிவேனோ

உரகபட மேல்வ ளர்ந்த பெரியபெரு மாள ரங்கர்
உலகளவு மாலம் கிழ்ந்த மருகோனே
உபயகுல தீப துங்க விருதுகவி ராச சிங்க
உறைபுகலி யூரி லன்று வருவோனே

பரவைமனை மீதி லன்று ஒருபொழுது தூது சென்ற
பரமனரு ளால்வ ளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதில் நின்ற பெருமாளே.

**தனனதன தான தத்த தனனதன தானதத்த**
**தனனதன தானதத்த தனதான**

சரணகம லாலயத்தை அரைநிமிட நேரமட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்கம் உறுவேனோ

கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரந்த மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்பம் அணிவோனே

தருணமிதை யாமிருத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேக முற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே.

## நல்லைமுருகன் அர்ச்சனை மாலை

திருச்சிற்றம்பலம்

**இராகம் : வஸந்தா** **தாளம் : ஆதி**

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றிய மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநி பாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

உம்பர்தருத் தேனு மணிக் கசிவாகி
ஒண்டகடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்ப ரகத் தேபருகிப் பலகாலும்
என்றனு யிர்க் காதரவு றருள்வாயே
தம்பிதனக் காக வனத் தணைவோனே
தந்தை வலத்தா லருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை முருகன் திருப்புகழ்

இராகம் : மோகனம் தாளம் : ஆதி

ஆறுமுடியாட ஆறு முக மாட
ஆரவடமாட வரை போலி
ஆறு புய மாட ஞான அருள் ஊறி
ஆறு விழியாட நகை யாட
வீறு கவனாட வாகு வல மாட
வீசு படை யாட வினையாட
வேத பரநாத கீத கடலாட
வேடுவ குமரி வலமாட
ஏறு மயி லாடக் கூறு மயி லாட
ஈறில் பிடியானை இடமாட
ஏழுலக மாட ஏழுபவ மாட
ஞான நடமாடும் முருகேசா
நாறு மலர் நாத நூறு பத மேறி
நாத இசை பாடும் பொழில் சூழும்
ஞானத் தவ யோகி சேரும் நல்லை யூரில்
நாளும் அருள் கூறும் பெருமாளே

## திருப்பரங்குன்றம்

இராகம் : சண்முகப்பிரியா தாளம் : மிஸ்ரசாபு

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக்குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவருள்
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துத் தலை தத்தக் கணை தொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி விரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகு பொருள்
பட்சத்தொடு சட்ஷித் தருள்வது மொருநாளே
தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிமிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகு தொகு
சித்ரப் பவுரிக்குத் திரிகடக எனவோதக்
கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றொரு நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே

## நல்லூர்

**இராகம் : சிந்துபைரவி** **தாளம் : மிஸ்ரசாபு**

தூவி மயில்கடல் போல அதன் மிசை
ஞாயிறென வரும் - உருவாலும்
தோளில் அசைகடம் பாலும் அடியவர்
தூவு பிறமலர் - வகையாலும்
ஆவி உனதடி மேவி சிறிதும்
விடாது கழல்வது - அறியாயோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகம் உனதருள் ஆன கடலிடை
ஆடல் புரிவது - தெரியாதோ
தேவர் படு துயர் யாவும் பொடிபட
சேனை யொடு களம் - புகுநாளில்
தீய அவுணர்கள் மாய நெடுவரை
சாய விடு மொரு - வடிவேலா
கோவில் களில் அழகான வடிவமை
கோலம் அமர் நல்லை - உறைவோனே
கூடும் அடியவர் பாடும் இசை மழை
ஊடு நனைகின்ற - பெருமாளே

இராகம் : ரேவதி
தாளம் : கண்டசாபு

அரவு மதிநாறு கொன்ற அறுகுநதி சூடுகின்ற
அசல மகள் பாதி கொண்ட திருமேனி
அணில நில நீர் விசும்பு பணிநிலவு தீ விசும்பும்
அலரி உயிராய் அமர்ந்த - பெருமானின்
திரு நுதலிலே எழுந்த சுடுவழியிலே பிறந்து
திரு மகளுலாவு கந்த - மலர்வாவி
சிறு குழலியாகி யங்கு அறுவர் தரு பால் மகிழ்ந்து
சிவை தழுவ ஆறும் ஒன்று - வடிவாகி
சிரமு மொரு மூவிரண்டு கரமுமுயர் ஆறிரண்டு
திரு விழிகள் நாலிரண்டொடு ஒரு நாலும்
திருவடிகள் ஒரிரண்டு மருளுருவ மாகி வந்து
செகமதுய்யவே எழுந்த - முருகேசா
வரை யுருவவே லெறிந்து திருதனுடல் கூறுகண்டு
மயி லினொடு கோழி கொண்ட திறலோனே
வலிய வினை யோட இன்று விரைய வரவேனும் நன்று
மலியும் நல்லையூருகந்த - பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்செந்தூர்

இராகம் : கல்யாணவசந்தம் தாளம் : ஆதி (திஸ்ரநடை)

தண்டே னுண்டே வண்டார்வஞ்சேர்
தண்டார் மஞ்சுக் குழல்மானார்
தம்பா லன்பார் நெஞ்சே கொண்டே
சம்பா வஞ் சொற் றடிநாயேன்
மண்டோயந்தீ மென்கால் விண்டோய்
வண் கா யம் பொய்க் குடில்வேறாய்
வன் கானம்போ யண்டா முன்பே
வந்தே நிற் பொற் கழல்தாராய்
கொண்டாடும் பேர் கொண்டாடுஞ்சூர்
கொன்றாய் வென்றிக் குமரேசா
கொங்கார் வண்டார் பண்பாடுஞ் சீர்
குன்றா மன்றற் கிரியோனே
கண்டா கும்பா லுண்டா யண்டார்
கண்டா கந்தப் புயவேளே
கந்தா மைந்தா ரந்தோள் மைந்தா
கந்தா செந்திற் பெருமாளே

## பழநி

இராகம் : செஞ்சுருட்டி தாளம் : ஆதி

நாத வித்து காலதீ நாமோ நம
வேத மந்ர சொரூபா நமோ நம
ஞான பண்டித சாமி நமோநம - வெகுகோடி
நாம சம்பு குமாரா நமோ நம
போக அந்தரி பாலா நமோ நம
நாக பந்த - மயூரா நமோ நம - பரசூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேத தண்ட விநோதா நமோ நம
கீத கிங்கிணி பாதா நமோ நம
தீர சம் ப்ரம வீரா நமோ நம - கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோ நம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோ நம - அருள் தாராய்
ஈதலும் பல கோலால பூஜையும்
ஓத லுங் குண ஆசார நீதியும்
ஈரமுங் குரு சீர்பாத சேவையும் - மறவாத
ஏழ்தலம் புகழ் காவேரியால் விளை
சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கெட்பீர நாடாளு நாயக - வயலூரா
ஆதரம் பயிலாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மா கயி - லையி லேகி
ஆதியந்த வுலா வாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நன்னாடத்தில்
ஆவிநன் குடி வாழ்வான தேவர்கள் - பெருமாளே

## சுவாமி மலை

இராகம் : கம்சானந்தி தாளம் : ஆதி

நிறை மதி முக மெனு - மொளியாலே
நெறி விழி கணை யெனு நிகராலே
உறவுகொள் மடவர்கள் - ளுறவாமோ
உன திரு வடியினி யருள்வாயே
மறைபயிலரிதிரு மருகோனே
மருவலரசுரர்கள் - குலகாலா
குற மகள்தனை மண மருள்வோனே
குருமலை மருவிய - பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தணிகை

துப்பா ரப்பா டற்றி மொய்க் கால்
சொற்பா வெளி முக் குணமோகம்
துற்றா யப்பீறற்றோ லிட்டே
சுற்றா மதனப் பிணிதோயும்
இப்பாவக் காயத்தா சைப்பா
டெற் றே யுலகிற் பிறவாதே
எத்தார் வித்தா ரத்தே கிட்டா
எட்டா அருளைத் தரவேணும்
தப்பாமற் பாடிச் சேவிப்பார்
தத்தாம் வினையைக் களைவோனே
தற் காழிச்சூர் செற்றாய் மெயப்போ
தத்தாய் தணிகைத் தனிவேலா
அப்பா கைப்பாலைப்போல் சொற்கா
வற் பா வை தனத் தணைவோனே
அத்தா நித்தா முத்தா சித்தா
அப்பா குமரப் பெருமானே

## பழமுதிர்சோலை

இராகம் : சகானா தாளம் : கண்டசாபு

காரணம தாக வந்து புவிமீதே
காலனணுகா திசைந்து கதிகாண
நாரணனும் தேவன் முன்பு தெரியாத
ஞான நடமே புரிந்து வருவாயே
ஆரமுதமான தந்தி மணவாளா
ஆறுமுக மாறிண்டு விழியோனே
சூரர் கிளை மாள வென்ற கதிர்வேலா
சோலை மலை வேவி நின்ற பெருமானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நக்கீரதேவர் அருளிய

# திருமுருகாற்றுப்படை

## 1. திருப்பரங்குன்றம்

ஆசிரியப்பா

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு.
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி;
உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்,
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை,

மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்;
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்நறும் கானத்து,
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து

உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்;
மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால், வாங்கிய நுசுப்பின், பணைத்தோள்,
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்,

பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்,
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்,
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழைச்
சேண்இகந்து விளங்கும் செயிர்தீர் மேனித்;
துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதிச்

செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு,
பைந்தாள் குவளைத் தூஇதழ் கிள்ளித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்

துவர முடித்த துகள்அறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக், கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்இணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்அரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத், துணைத்தக

வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக், கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி, விரிமலர்

வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியாக்,
கோழி ஓங்கிய வென்று அடு விறற்கொடி
வாழிய பெரிதுஎன்று ஏத்திப், பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்,

சூர்அர மகளிர் ஆடும் சோலை;
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்;
பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்

சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்
உலறிய கதுப்பில் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையோடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதில், பிணர்மோட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்,
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர,
வென்று அடு விறற்களம் பாடித் தோள்பெயரா,

நிணம்தின் வாயள் துணங்கை தூங்க,
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக், கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து

எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு,
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின், பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப

இன்னே பெறுதிநீ முன்னிய வினையே,
செருப்புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்,
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து,

மாடமலி மறுகில் கூடல் குடவயின்,
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி, வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி, எல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்

அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றுஅமர்ந்து உறைதலும் உரியன்; அதாஅன்று;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்,
படுமணி இரட்டும் மருங்கின், கடுநடைக்

கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளர்ந்து அன்ன வேழமேல் கொண்டு,
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப;

நகைதாழ்பு துயல்வரூஉம் வகைஅமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்;
தாவில் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன் நேர்பு எழுதரு வாள்நிற முகனே;

மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்; ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத்தன்றே; ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

அந்தணர் வேள்விஓர்க் கும்மே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்
திங்கள் போலத் திசைவிளக்குமே; ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே; ஒருமுகம்

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந்தன்றே; ஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்,
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பில்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர்தோள்,
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை; உக்கம் சேர்த்தியது ஒருகை;
நலம்பெறு கலிங்கத்துக் குரங்கின்மிசை அசைஇயதுஒருகை;
அங்குசம் கடாவ ஒருகை; இருகை

ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப! ஒருகை
மார்பொடு விளங்க; ஒருகை
தாரொடு பொலிய; ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப; ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட; ஒருகை

நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய; ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட; ஆங்கப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி,
அந்தரப் பல்இயம் கறங்கத் திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப, வால்வளை ஞரல,

உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ,
விசும்பு ஆறாக விரைசெலல் முன்னி;
உலகம் புகழ்ந்த ஓங்குஉயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே அதாஅன்று;

## 3. திருவாவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர், சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்,
மாசுஅற இமைக்கும் உருவினர், மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர், நன்பகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவுடன் கழிந்த உண்டியர், இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர், யாவதும்
கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர், காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர், இடும்பை

யாவதும் அறியா இயல்பினர் மேவரத்,
துனிஇல் காட்சி முனிவர் முன்புகப்,
புகைமுகந்து அன்ன மாசில் தூஉடை,
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்,
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்

நல்லியாழ் நவின்ற நயனுடைய நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்னரம்பு உளர,
நோய்இன்றி இயன்ற யாக்கையர், மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர், அவிர்தொறும்
பொன்உரை கடுக்கும் திதலையர், இன்னகைப்

பருமம் தாங்கிய பணிந்து ஏந்து அல்குல்
மாசுஇல் மகளிரொடு மறுஇன்றி விளங்கக்
கடுவோடு ஒடுங்கிய தூம்புஉடை வால்எயிற்று
அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்

புள்அணி நீள்கொடிச் செல்வனும், வெள்ஏறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமைஅமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து, நூறுபல்

வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து,
ஈரிரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்,
நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய

உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக,
ஏம்உறு ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்,

பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு,
ஒன்பதிற்று இரட்டி உயிர்நிலை பெறீஇயர்;
மீன்பூத்து அன்ன தோன்றலர்; மீன்சேர்பு
வளிகிளர்ந்து அன்ன செலவினர், வளியிடைத்

தீஎழுந்து அன்ன திறலினர், தீப்பட
உரும்இடித்து அன்ன குரலினர், விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்.
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்

ஆவினன்குடி அசைதலும் உரியன்; அதா அன்று;

## 4. திருவேரகம்

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி,
அறுநான்கு இரட்டி இளமைநல் யாண்டு
ஆறினில் கழிப்பிய அறன் நவில் கொள்கை,

மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து,
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல,
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலராக் காழகம் புலர உடீஇ,
உச்சிக் கூப்பிய கையினர், தற்புகழ்ந்து

ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப் பாடி,
விரையுறு நறுமலர் ஏந்திப், பெரிதுவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்; அதா அன்று;

## 5. குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு, வேலன்

அம்பொதிப் புட்டில் விரைஇக், குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்;
நறும்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்,
நீடுஅமை விளைந்த தேக்கள் தேறல்

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர,
விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி,
இணைத்த கோதை அணைத்த கூந்தல்,

முடித்த குல்லை இலையுடை நறும்பூச்,
செங்கால் மரா அத்த வால்இணர் இடைஇடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ,
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு

செய்யன், சிவந்த ஆடையன், செவ் அரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்,
கச்சினன், கழலினன், செச்சைக் கண்ணியன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழலன், கோட்டன், குறும்பல் இயத்தன்,
தகரன், மஞ்ஞையன், புகரில் சேவலம்

கொடியன், நெடியன், தொடிஅணி தோளன்;
நரம்பு ஆர்த்து அன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறும்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்,
முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி,

மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து,
குன்றுதொ றாடலும் நின்றதன் பண்பே; அதாஅன்று;

## 6. பழமுதிர்ச் சோலை

சிறுதினை மலரொடு விரைஇ, மறி அறுத்து,
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ,
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்,

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்,
வேலன் தைஇய வெறிஅயர் களனும்,
காடும், காவும் கவின்பெறு துருத்தியும்,
யாறும், குளனும், வேறுபல் வைப்பும்,
சதுக்கமும், சந்தியும், புதுப்பூங் கடம்பும்,

மன்றமும், பொதியிலும், கந்துடை நிலையினும்,
மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர,
நெய்யோடு ஐயவி அப்பி, ஐதுரைத்துக்,
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி,
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்,

செந்நூல் யாத்து, வெண்பொரி சிதறி,
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில்பலிச் செய்து, பல்பிரப்பு இரீஇச்,
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்

பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற அறுத்துத், தூங்க நாற்றி,
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்னியம் கறங்க,

உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக், குறமகள்
முருகியம் நிறுத்து, முரணினர் உட்க,
முருகாற்றுப் படுத்த உருகெழு வியனகர்,
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்

கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி,
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி,
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட,
ஆண்டாண்டு உறைதலும் அறிந்த வாறே;
ஆண்டாண்டு ஆயினும் ஆகக் காண்தக

முந்துநீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்,
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி,
''நெடும்பெரும் சிமயத்து நீலப் பைஞ்சுனை,
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப,
அறுவர் பயந்த ஆறமர் செல்வ!

ஆல்கெழு கடவுள் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பின் பழையோள் குழவி!
வானோர் வணங்குவில் தானைத் தலைவ!

மாலை மார்ப! நூலறி புலவ!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ!

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருக!
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபே ராள!

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்!
மண்டமர் கடந்தநின் வென்று ஆடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்!
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்;
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி!

போர்மிகு பொருந! குரிசில்! எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி, ஆனாது,
நின்அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்,
நின்அடி உள்ளி வந்தனென்; நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய்'' எனக்

குறித்தது மொழியா அளவையில், குறித்துடன்
வேறுபல் உருவில் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி,
''அளியன் தானே, முதுவாய் இரவலன்.
வந்தோன் பெரும!நின் வண்புகழ் நயந்து''என

இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்,
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி,
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணம்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அஞ்சல் ஓம்புமதி, அறிவல்நின் வரவு,''என
அன்புடை நன்மொழி அளைஇ, விளிவின்று,
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகத் தோன்ற, விழுமிய
பெறல் அரும் பரிசில் நல்குமதி; பலவுடன்

வேறுபஃல் துகிலின் நுடங்கி, அகில்சுமந்து,
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு,
விண்பொரு நெடுவரைப் பரிதியில் தொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய, நன்பல

ஆசினி முதுசுளை கலாவ, மீமிசை
நாக நறுமலர் உதிர, யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப், பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப், பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று,

நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா,
வாழை முழுமுதல் துமியத் தாழை,
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்,
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்,

கோழி வயப்பெடை இரியக், கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக், கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச் சேண்நின்று

இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பாக்கள்

குன்றம் எறிந்தாய், குரைகடலில் சூர் தடிந்தாய்,
புன்தலைய பூதப் பொருபடையாய், - என்றும்
இளையாய், அழகியாய், ஏறூர்ந்தான் ஏறே,
உளையாய்என் உள்ளத்து உறை. 1

குன்றம் எறிந்ததுவும், குன்றப்போர் செய்ததுவும்,
அன்றங்கு அமரரிடர் தீர்த்ததுவும், - இன்றுஎன்னைக்
கைவிடா நின்றதுவும், கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். 2

வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல், செவ்வேள் திருக்கைவேல், - வாரி
குளித்தவேல், கொற்றவேல், சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை. 3

இன்னம் ஒருகால் எனதுஇடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில் வேல் சூர்தடிந்த கொற்றவா - முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுஉருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். 4

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்;
பின்னை ஒருவரையான் பின்செல்லேன், - பன்னிருகைக்
கோலப்பா, வானோர் கொடியவினை தீர்த்துஅருளும்
வேலப்பா, செந்திவாழ் வே. 5

அஞ்சு முகம்தோன்றில் ஆறு முகம்தோன்றும்;
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும்; - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில், இருகாலும் தோன்றும்;
முருகாஎன்று ஓதுவார் முன். 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! - ஒருகைமுகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். 7

காக்கக் கடவியநீ காவாது இருந்தக்கால்,
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா? - பூக்கும்
கடம்பா! முருகா! கதிர்வேலா! நல்ல
இடங்காண் இரங்காய் இனி. 8

பரங்குன்றில் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு - சுருங்காமல்,
ஆசையால் நெஞ்சே, அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். 9

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து, மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும். 10

## முருகன் துதி

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நல்லூர் நாற்பது

### விநாயகர் காப்பு

ஐயா திருஞான மெய்யா அணைத்தருளுங்
கையா கணபதியே காத்தருள்வாய் - பொய்தீர்வேல்
நல்லூர் முருகன்றாள் நாற்பதுபா நான்படைக்க
எல்லா நலங்களுமிங் கீந்து.

### கலைமகள் வணக்கம்

நல்லூரருட் கந்தன்கழல் நானும்நலப் பாட்டால்
எல்லோர்முனும் பாடத்துணிந் தேன்நின்னருள் தேனிங்
கில்லையெனில் இந்நாற்பதை ஏலான்எழில் வேலன்
நல்லாயிருந் தென்னாவினில் நல்காயருள் வாணி.

## 1. போற்றிப்பத்து

அன்பாகி அருளாகி அறிவாய் நல்ல
அமிழ்தாகி அழகாகி அனைத்து மாகி
இன்பாகி இருந்துள்ள இருளைப் போக்கி
எமையாளும் உமையாளன் இறைவன் இந்தத்
துன்பாகுங் குமிழ்வாழ்வில் துவள்வார் தொல்லை
துடைத்தாள அருள்செய்யக் கிடைத்த செல்வா
உன்பாதம் உன்பார்வை உன்வேற் கைநல்
லூருண்டே உறுநோய்கள் உண்டோ போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளனாளும் உயிராயெம் உள்ளம் உள்ளான்
உலகண்ட வெளியுள்ள உலகக் கோமான்
வளனாகும் வாழ்வுக்கு வழியாய் மாயை
மலம்போக்கும் மணியான மருந்தாய் மாதை
அளவான அரைமார்பில் அணைத்தா னுக்கோர்
அழகாறு முகமான ஆற்றல் ஊற்றாய்
வளமார்நல் லூர்போற்றி வாழும் எங்கள்
மனம்பற்றி மகிழ்வூட்டும் மயிலா போற்றி!

வல்லாரின் வல்லானாய் வடிவே லாயுள்
வளமாக்கி யாய்நல்ல வற்றா வூற்றாய்
எல்லாரின் உள்ளத்தும் என்றும் நின்றே
இயல்பாக இனிக்கின்ற இன்ப மாகி
இல்லாரின் உள்ளாரின் இன்னல் யாவும்
இல்லாமற் செய்கின்ற எழிலார் தூய
நல்லூரிற் பெருமானாய் நாளும் நம்மை
நன்றாகக் காக்கின்ற நாதா போற்றி!

மெய்யான பொருள்மேனிச் சிவனார் தாமும்
மேலாக வளர்த்தஎழில் மென்பொன் மானும்
மெய்ஞ்ஞானக் கலையாவும் மிக்கான் ஐந்து
கையானும் தம்பியரும் களிப்பாற் பூக்க
உய்வான கருமங்கள் உண்மை ஓங்க
உலகாளும் உனதூறும் உள்ளம் கொள்ளத்
தெய்வானை வள்ளிமயில் செய்வேல் நல்லூர்
செய்துள்ள தவமென்ன செந்தாள் போற்றி!

கொடிதீர்த்த இடைக்காலங் கோடி கோடி
கொண்டுன்னை உள்ளத்திற் கொடுமை மாண்டு
விடிவாகும் வாழ்வென்று விம்மிப் பொங்கி
விழியாறு பாய்ந்தோட விட்டே யாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிதீர்ந்த மரமாகி அண்டிக் கண்டே
அணுவாக வணுவாக வனுப விக்கும்
அடியார்கட் கருள்பாலித் தல்லல் தீர்க்கும்
அழகான நல்லூரின் அறிவே போற்றி!

வேறேது பேறேது வேலே போதும்
வேண்டாத தொல்லைகளும் வீழ்ந்தே தீரும்
மாறாத இளமைஎழில் மணமுஞ் செய்ய
மலரடியும் மயக்கிவிடும் முகங்க ளாறுஞ்
சீறாத பாம்புமயில் சீர்வேல் சேவல்
திருவள்ளி தெய்வானை தருநற் காட்சி
ஆறாத அடியவருக் கமழ்தே யாக
அருள்வாயே நல்லூரின் அறிவே போற்றி!

முனைப்பொழிய முருகுதரும் முருகன் நீயே
மூண்டதுயர் முடித்துவரும் முனிவன் நீயே
நினைப்பவர்கள் நின்னடியை நீங்கா இன்ப
நீர்வழிய நெக்குருகி நீந்தா நிற்பார்
உனைப்புரியின் உண்மைநல ஒளிசேர் வாழ்க்கை
உண்டுபல கண்டுவழி உலகம் உய்யும்
தினைப்புலநல் மயில்பின்னர் சென்ற நல்லூர்த்
திருமேனி நம்பின்னார் வருமே போற்றி!

ஆண்டுபல ஆரியர்கள் ஆண்ட நல்லூர்
ஆடிஒரு வேட்டைதனிற் பெருமாள் ஆண்டே
மீண்டுமுயிர் ஊட்டிஎழில் மிகுநல் லூராய்ப்
பூண்டுபுகழ் ஆண்டரசு புரிந்தே நின்னை
வேண்டிஅரி தானவொரு வேலை செய்தான்
வெற்றிஎழில் வேலருளின் பெற்றி போற்ற
நீண்டபுகழ்க் கோயிலவன் நிறுவித் தந்தான்
நின்னடிகள் நாம்காண நின்றாய் போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுப் புகழ்கொண்ட வளநல் லூரில்
வன்கனக சூரியனும் மாடப் பொன்னார்
நிரலான வீடுநெடுஞ் சாலை நீள
நிலையாகக் கலையாக நிறுவப் பின்னாள்
பரராச சேகரனும் பக்கம் எல்லாம்
பலகோயில் கண்டானே பாரோர் நாளும்
கரமேந்திக் கடலாகக் கண்ணீர் கொட்டக்
கலைக்கோயில் நீகொண்டு களித்தாய் போற்றி!

ஆடிமயில் ஏறிவரின் அடியார் கூட்டம்
ஆடியுற வாடிவரும் அருளில் இன்பம்
கூடிவரப் பாடிடுவர் கூர்வேல் போற்றி
குலவுமெழில் நலவுபுகழ் கூட்ட வீதி
மாடிமனை மலர்ப்பொழில்கள் மலியும் நல்லூர்
வாழ்ந்துமகிழ் வெய்திவரும் மயிலா நம்மைத்
தேடியிடர் தீர்க்கவருந் திருத்தா ளுண்டே
தேவையிவண் ஒன்றுமிலைத் தேவர் நாமே!

## 2. சிறப்பீர்பத்து

வீடுநலத் தூய்மைமிக விளங்கு மெங்கும்
விண்ணவரின் தன்மையுடன் விரதங் கொள்ளக்
கூறுமடி யார்களது குமரா வுள்ளக்
குன்றிலருள் பெய்துதவக் குடிகொள்.வாயே
நாடுகொடும் போக்குகளை நன்றே தள்ளி
நன்மைதரும் நல்வழியை நாளும் உன்னி
நாடிவிடுந் தொல்லைகளை நாசஞ் செய்யும்
நல்லூரான் கொடியேற்றம் நாளை என்றே!

விண்ணவரும் வியக்கின்ற வீதிப் பந்தல்
மிகுதோர ணங்களெழில் விளக்குக் கும்பம்
கண்ணணைஅட கட்டிவிடுங் கலைக ளூறும்
காட்சிபல கலைஞர்களின் மாட்சி கூறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணெனவே கதிரவனுந் தன்மை மாறும்
தக்கவழி காட்டிநலத் தன்மை யூட்டி
மண்ணுலகி லடியவரின் வாழ்வை யாக்கும்
மயிலோனின் கொடியேற்றம் மறுநாள் என்றே!

கூடிடுவர் மண்வீழாக் கும்பல் வெள்ளம்
கூற்றாகிக் கொடுமைகளைக் கொல்லும் நின்னைப்
பாடிடுவர் பண்ணோடு பைந்தாள் தேனைப்
பருகிடுவர் பதறிடுவர் பத்தி முத்தி
ஆடிடுவர் அப்பா ஓ! ஆட்கொள் என்பார்
அலறிடுவர் குளறிடுவர் ஆவல் மீறி
வாடிடுவர் வலியபிடி வாதம் நூறால்
வாழ்வுநலம் நல்லூரான் வைப்பா னென்றே!

தங்கும்பல் கோடிதவத் தண்ணூர் நல்லூர்
தன்னாலே ஊரோங்கத் தரணி யோங்க
எங்கும்பல் இன்பங்கள் இலங்க என்றும்
இருள் மாளும் ஒளிவீச ஏற வென்றே
செங்குந்த செம்முள்ளச் சீலர் கோலத்
தேர்வைத்துக் கொடிக்கான சேலை ஈய
பொங்கும்நல் வேதமுடன் மங்க ளங்கள்
பொருந்தவுயர் பொழுதுகொடி போற்றி ஏறும்!

தித்திக்கும் மருந்தாகித் திறந்து கண்ணைச்
சிறந்துய்யும் வழிதன்னைத் தெரிக வென்றே
பத்தர்க்கு வழிகாட்டிப் பசியும் போக்கிப்
பார்த்துள்ளம் பழுத்தூறப் பத்தாம் நாளில்
முத்தொக்கு மஞ்சத்தில் முற்பி றப்பில்
மூண்டுள்ள தீவினைகள் முடித்தே நன்றாய்
எத்திக்கும் இடங்கூடி இருகை ஏந்தி
ஏற்றவே போற்றவே எழுவாய் நீயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலேறி மணங்கொண்ட வள்ளி யோடு
வாழ்வாங்கு வாழ்கென்று வாழ்த்தி நல்ல
சுயமான அறிவேற்றித் துணிவு தந்து
துன்பங்கள் துன்புற்றுத் துவண்டே மாள
நயமூறு சிரிப்போடு நற்கண் ணோடு
நல்லூரி னருள்திக்கு நாலும் பாயப்
பயனூறு நீதந்து பதினே ழாம்நாள்
பனிப்பூச்சப் பரம்மீது பவனி கொள்வாய்!

திசையாவும் வென்றாங்கு திரும்பும் வேளை
திடங்கொண்ட செயல்வீரன் திறமை காட்ட
அசைவெய்தக் கைலாய வழகுக் குன்றம்
அடித்தோடிப் பெருக்காகி யழித்த கங்கை
விசைகண்ட அருளுள்ளம் விரலாற் சற்றே
மிதித்துள்ள திறமைக்கு விதித்தே யெல்லை
இசைகேட்டு மகிழ்ந்துள்ளம் இளகுங் காட்சி
ஈர்க்கும்பத் தொன்பதினில் எங்கள் நெஞ்சே!

ஆலால முண்டமரர் அல்லல் தீர்த்தோன்
ஆள்கின்ற அடியாரின் அமிழ்தக் குன்றம்
மேலேறி வருங்கோல வேளை பத்தர்
மேல்வாங்கும் கண்ணோடு மெய்ம றந்தே
பாலாகத் தேனாகப் பழங்க ளாகப்
பார்த்தொன்றிப் பருகிடுவர் பாரி லோங்க
வேலோடு விளைக்கின்ற மெய்வி ருந்தாம்
மேலான எழிற்காட்சி வேறெங் குண்டோ?

தங்கமயில் மீதிலொரு தண்டா பாணித்
தனியழகுக் கோலமதைத் தாங்கி வந்தே
பொங்குபுகழ் ஊர்த்தெருவைப் போர்த்தே ஆர்த்துப்
போற்றியுனைப் பாடியுளம் பொலிவார் பொன்னாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கிவரும் மாலையிலே மாம்ப ழத்தின்
மாண்கதையின் உட்பொருளை மனத்தே கொள்ள
வெங்குமுயி ரிருந்துமிக வினிப்பா யென்றே
இருபத்தி ரண்டதனி லியம்பா நிற்பாய்!

நீண்டவுயர் கோபுரமுன் நின்றே யென்றும்
நீங்காத பேரன்பில் நீந்த மக்கள்
வேண்டவருள் ஆனைமுகன் மாம்ப ழத்தை
வேலான மேலான மெய்நாங் காண
ஆண்டியென மாண்டவெழி லணிக லன்கள்
ஆடைகளும் நீக்கிநிலை அழகைக் காட்டிப்
பூண்டுகலைக் கோவணமும் புகுவை கோயில்
புரியாத பொருளுக்குப் புதல்வ னென்றே!

தேரென்றாற் கருமகவுஞ் சிறந்தே யார்த்துத்
தெரிந்தின்பப் பயனூறித் திளைத்தே பூக்கும்
பேரொன்று பேச்சொன்று மூச்சு மொன்றே
பேசாத வாயெல்லாம் பேசும் நாளை
தேரென்று தேரென்று திருநாள் முன்னாள்
தேங்கிவந் தடியார்கள் திரள்வா ரன்றே
ஊரொன்றாம் நல்லூரும் உலக மாகும்
ஊகூடும் வெள்ளத்துக் குவமை யுண்டோ!

மாடங்கள் மடங்கள்பேர் மண்ட பங்கள்
மன்றங்கள் பந்தல்கள் வாடி வீடு
ஆடுங்காற் பந்தல்கள் அப்போ தொன்றும்
அந்தரக் குடிசைகள் அண்டி யுள்ள
வீடெல்லாம் விரிந்தோடி விளங்கும் நற்பேர்
வீதிகள் பாதைகள் மிஞ்சி யுள்ள
ஊடெல்லாம் கோடியோ டோடை பக்க
ஊரெல்லாம் உறைவரே உருகி மக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிகாலை பெருக்காற்று வீதி யாவும்
விரைந்தோடிக் கடல்நல்லூர் விம்மிக் கூடும்
பிடிவாதம் பலவாறு பிடித்தே கீற்றுப்
பிறைகொண்ட சடையானின் பிள்ளை யன்புக்
கடியார்கள் ஆளாகி யாறாய்க் கண்ணீர்
அலைமோத அழிவாக வலைக்கும் அல்லல்
விடியாத வாழ்நாளின் விடிவைக் காண
விரைந்துண்மை விளக்கத்தில் வியர்த்தே வீழ்வார்!

அசையாத மணியோசை யாறு மார்க்க
அடிக்கமணி எட்டழகி லாறு கூடும்
திசையாவும் பழிதீர்ந்து சிறப்பி லோங்கத்
தீபங்கள் சின்னங்கள் சீராய்ச் சூழ
இசைவாயும் கருவிகளும் இசைப்பப் பத்தர்
இருகைகள் தலைக்கேற இணையி லின்ப
விசைமீற விண்ணார்க்கச் சிலிர்க்கத் திக்கு
வெல்லழகிற் பல்லழகிற் சொல்ல வொண்ணாப்

பேரழகிற் சீரணியிற் பெற்ற நல்ல
ஊர்மயிலிற் சேர்கொடியு முற்ற வேலும்
ஈரழகி மார்களிரு பக்க மேற்க
வார்கருணை முறுவலுடன் வடிவி லோங்குந்
தேரெனவே பேரொளியுந் திகைத்து நிற்கச்
செல்லுகையிற் கொல்லுதுயர் வெல்லு கின்ற
ஆர்கழலும் அடியவருக் காகுங் காட்சி
அரகரவோ அரகரவோ அமிழ்தக் காட்சி!

பார்ப்பார்கள் பார்ப்பார்கள் பத்தர் கைகள்
பன்னியெழுந் துச்சிகொளப் பாங்கர் நீங்க
ஆர்ப்பார்கள் முருகான அமிழ்தை யுண்டே
யருமையோ வருமையென் றாடிப் பாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்ப்பார்கள் கண்ணீரை வற்றா ஊற்றாய்
வடிவேலன் வழங்கவே வாழ்வின் பேற்றை
வேர்ப்பார்கள் வேலாஓ வேலா என்பார்
வேண்டுவன வேண்டாது வேண்டிக் கொள்வார்!

கார்கண்ட மயில்போலக் களிப்பார் பல்லோர்
கண்பெற்ற முகம்போல ஒளிப்பார் பல்லோர்
நீர்கண்ட நிலம்போல் நிறைவார் பல்லோர்
நிகரற்ற நூல்செய்து நிலைப்பார் பல்லோர்
பார்கண்ட பொருள்பெற்ற பசியோர் பல்லோர்
பைந்தமிழைச் சுவைத்தினிது பயின்றோர் பல்லோர்
ஊர்கண்டு தேர்கொண்ட உருவத் தேனை
உண்டிங்கு பெற்றுள்ள உரிமை உய்வார்!

வாராத பேரில்லை வந்தே தீர்வார்
வாழ்நாளை வளமாக்கும் மனங்கொள் காட்சி
பாராத பேரில்லைப் பார்த்தே தீர்வார்
பயனொன்று வேறில்லைப் பன்னீர்க் காட்சி
நேராத பேரின்பம் நேர்ந்தே தீரும்
நெஞ்சம்நெக் குருகிவிழும் நீர்க்கண் காட்சி
தீராத வினையாவும் தீர்ந்தே தீரும்
தீர்த்தம்வேல் ஆடவரும் திருப்பொற் காட்சி!

அடியார்கள் ஆளாகும் அருட்பாற் காட்சி
அல்லலுமட் டூழியமும் அழியுங் காட்சி
விடியாத வாழ்வங்கு விடியுங் காட்சி
விண்டமிழின் அமுதமணம் வீசுங் காட்சி
முடியாத முயற்சிகளும் முடியுங் காட்சி
முத்தமிழர் ஆட்சியினை முருகங் காட்சி
அடியார்கள் படிமீதில் ஆடிப் பாட
ஐவர்களும் தூநீரில் ஆடுங் காட்சி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையாத உள்ளங்கள் உடையுங் காட்சி
உண்மையினை உணர்ந்தவர்கள் உருகுங் காட்சி
அடையாத அருமுரிமை அடையுங் காட்சி
அடியவர்கள் வீட்டுப்பே றடையுங் காட்சி
படையாக நெடுநேரம் படிகள் மீதில்
புடைசூழ்ந்த அடியார்கள் பூக்க முக்கண்
உடையானும் வேலோருஞ் சுரரு மொன்றாய்
உளமாடி நீராட உலகம் உய்யும்!

## 3. வேண்டும்பத்து

ஆண்டவர் அன்றுபுவி ஆற்றல் கொண்டோர்!
ஆக்கமறி வூக்கமுடன் அறத்தில் வல்லோர்
நீண்டபுகழ் பூண்டவர்கள் நிகரில் லாதோர்
நீதிமுறை மாறுபட நீர்க்கண் ணோடே
ஈண்டவர்கள் இருள்படர இன்னல் சூழ
இருதலையிற் கொள்ளிஎறும் பானார் இங்கே
மீண்டவர்கள் மேன்மையுடன் நல்லூர் வேலா
விளங்கிவர நீஅருளல் வேண்டும் வேண்டும்!

இனிமையிலே ஏற்றமுடன் என்றும் வாழும்
இளமையிலே முழுமையிலே இளகுஞ் செம்மைத்
தனிமையிலே வன்மையிலே சங்கங் கண்ட
தகைமையிலே தாய்மையிலே சான்றோர் போற்றும்
கனிமையிலே கருத்தினிலே கடவுள் தன்மைக்
கருணையிலே கவர்வதிலே கற்றோர் பண்பில்
பனிமையிலே பதுமையிலே பால்வாய்ப் பண்பில்
பழைமையிலே வழமையிலே அழகுக் காமோர்

மொழியினிலே அரியதமிழ் மொழியைப் போன்றோர்
மொழிவேறொன் றில்லையென மொழிந்தார் சான்றோர்
விழியினிலே பெருமூச்சில் விழும்நீ ரோடு
வீரமொழி தீரமொழி வீழ்ந்தாள் தாழ்ந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியெதுவு மில்லாத வறியோர் போல
வந்தகுறை எச்சமதில் வாழும் ஈனப்
பழியழிய நல்லூரிற் படைவேற் கந்தா
பார்த்தருள வேண்டுமவள் பார்மேல் ஓங்க!

துள்ளிவிழும் தொடர்அருவிக் கொடிபோல் அன்புத்
தூயவுயர் குழல்வீணை மதிபோல் பண்புப்
புள்ளிஎழில் மான்நடன மயில்போல் வெல்லும்
புலிவில்லு மீன்தென்றல் புயற்காற் றைப்போல்
உள்ளதமிழ் நம்முடலின் உயிரின் மேலாள்
உலகமுவந் துயர்த்திவரும் ஒப்பில் லாதோர்
வள்ளுவனைக் கம்பனிளங் கோவை வானோர்
வருந்தியருஞ் செயல்பெற்ற மருந்தை மிக்க

அள்ளிவருங் காப்பியங்கள் ஐந்துங் கொண்டாள்
ஆழமறி யாதகடல் ஆனாள் மேனாள்
உள்ளிவரு வோர்உலைவு தீர அள்ளிக்
கொள்ளைவளங் கொடுத்தவுயர் கோன்மை கொண்டாள்
தள்ளியவள் வான்புகழைத் தரணி கொள்ளும்
தன்மையறி யாதவர்கள் தாழ்த்தி விட்டார்
கொள்ளமனங் கூடவிலைக் கொற்ற நல்லூர்
வள்ளிமயி லாஅவளை வாழ வைப்பாய்!

நன்றாகும் வாழ்விற்கு நாளை நம்மோர்
நடிப்பின்றி நஞ்சின்றி நல்லோர் வல்லோர்
நின்றேகும் நிலைப்பாதை நின்றே நேர்மை
நீங்காது துயர்சற்று நீடித் தாலும்
ஒன்றாகும் உயிர்ப்பண்பு நன்றாய் ஊறி
உருவாகும் எதிர்காலம் உணர்விற் கொண்டு
வென்றாகும் வரைமுந்திச் சென்றால் நல்லூர்
வேலாநம் மவருணர வருளல் வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளாட்டு வேலைகளில் வேண்டாப் பேச்சில்
  வெறும்வாயைச் சப்புவதில் விற்பார் நேரம்
முள்ளூட்டில் முள்நீக்க முன்னே மூச்சாய்
  முன்னேற முயல்வார்கள் முயற்கொம் பாகும்
கொள்ளாட்டில் அதுசூழல் கோயில் மேளம்
  கொக்கொக்க ரக்கென்று குதிப்பார் பின்னர்
தள்ளாட்டம் தலைமீறத் தாமே தாழ்வார்
  தண்ணல்லூ ரோயின்னார் தழைத்தல் வேண்டும்!

எடுப்பார்கள் இருப்போர்கள் தடுப்பார் தாங்கார்
  ஏனென்றால் ஏனென்பார் எண்ணார் ஏதும்
முடிப்பார்கள் முயல்வோர்கள் முயலார் முந்தி
  முற்றாகச் சிந்தனைகள் முன்பின் இன்றிக்
கெடுப்பார்கள் கேட்டாலோ கோளாக் காது
  குடிப்பார்கள் குதர்க்கங்கள் உளறிச் சும்மா
நடிப்பார்கள் இவர்போக்கை நல்லூர்த் தேவா
  நாமுய்ய அறிவுவழி நாட்டல் வேண்டும்!

ஒட்டார்பின் சென்றாங்கே ஓமாம் என்றே
  ஓடேந்திப் பலபக்கம் ஓடி ஆடி
விட்டார்கள் பலபேர்கள் வீரம் மானம்
  விற்றார்கள் இனப்பண்பு வீணே தாமாய்க்
கெட்டார்கள் முப்பாலைக் கேட்டார் இல்லைக்
  கிளித்தட்டு விளையாட்டுக் கீச்சு மாச்சுத்
தட்டாது நல்லறிவைத் தனிநல் லூரோய்
  தாமாக இவர்மாறத் தரல்நீ வேண்டும்!

நம்மவர்கள் நல்லவர்கள் நல்லூர் வேலா
  நற்செயலில் வல்லவர்கள் நன்றே ஆனால்
தம்மையறி யாதவர்கள் தமிழின் பண்பின்
  தம்மைதெரி யாதவர்கள் அதனால் தாழ்ந்தார்
வெம்மையர சாட்சிமிக வெந்தார் நொந்தார்
  வேறுபட நின்றுரிமை விட்டார் கெட்டார்
செம்மையுடன் செந்தமிழர் சிறப்பாய் ஓங்கச்
  செய்தருள வேண்டுமெழில் தேர்நல் லூரோய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யோகர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகர் சுவாமிகள் பாடல்கள்

## எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவானா னெங்கள்குரு நாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன் 1

தேகம்நீ யல்லவென்றா னெங்கள்குரு நாதன்
சித்தத்திற் றிகழுகின்றா னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள்குரு நாதன்
முத்திக்கு வித்ததென்றா னெங்கள்குரு நாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குரு நாதன்
விண்ணும் மண்ணு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன் 2

வாசியோகந் தேரென்றா னெங்கள்குரு நாதன்
வகாரநிலை அறியென்றா னெங்கள்குரு நாதன்
காசிதேசம் போவென்றா னெங்கள்குரு நாதன்
கங்குல்பக லில்லையென்றா னெங்கள்குரு நாதன்
நாசிநுனி நோக்கென்றா னெங்கள்குரு நாதன்
நடனந்தெ ரியுமென்றா னெங்கள்குரு நாதன்
மாசிலோசை கேட்குமென்றா னெங்கள்குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கொன்றா னெங்கள்குரு நாதன் 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவழியை அடையென்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம் விளங்குமென்றா னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கடவென்றா னெங்கள்குரு நாதன்
கட்டுப்படும் மனமென்றா னெங்கள்குரு நாதன்
ஒருவருமறியாரென்றா னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்றா னெங்கள்குரு நாதன்
நிருமலனா யிருவென்றா னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்றுசொன்னா னெங்கள்குரு நாதன் 4

திக்குத் திகாந்தமெல்லா னெங்கள்குரு நாதன்
சித்தததுள் நிற்கவைத்தா னெங்கள்குரு நாதன்
பக்குவமாய்ப் பேணென்றா னெங்கள்குரு நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றா னெங்கள்குரு நாதன்
அக்குமணி யணியென்றா னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்றா னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருகென்றா னெங்கள்குரு நாதன்
நித்தியன்நீ யென்றுசொன்னா னெங்கள்குரு நாதன் 5

தேடாமல் தேடென்றா னெங்கள்குரு நாதன்
சீவன் சிவனென்றா னெங்கள்குரு நாதன்
நாடாமல் நாடென்றா னெங்கள்குரு நாதன்
நல்லவழிதோன்றுமென்றா னெங்கள்குரு நாதன்
பாடாமற் பாடென்றா னெங்கள்குரு நாதன்
பத்தரினஞ் சேரென்றா னெங்கள்குரு நாதன்
வாடாமல் வழிபடென்றா னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள்குரு நாதன் 6

தித்திக்கு மொருமொழியா லெங்கள்குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணவரு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனானா னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள்குரு நாதன் 7

ஆதியந்த மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்
சுட்டிறந்த நில்லென்றா னெங்கள்குரு நாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குரு நாதன்
தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்
வாதியருங் காணவொண்ணா னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள்குரு நாதன் 8

முச்சந்திக் குப்பையிலே எங்கள்குரு நாதன்
முடக்கிக் கிடந்திடென்றா னெங்கள்குரு நாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள்குரு நாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
பச்சைப் புரவியிலே எங்கள்குரு நாதன்
பாங்காக ஏறென்றா னெங்கள்குரு நாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள்குரு நாதன்
தாவுபரி கட்டென்றா னெங்கள்குரு நாதன் 9

நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
போமேபோம் வினையென்றா னெங்கள்குரு நாதன்
போக்குகவர வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியென்றா னெங்கள்குரு நாதன் 10

O

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org